சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியக் கவிதை

# தமிழ்க் கவிதைகள்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியக் கவிதை

# தமிழ்க் கவிதைகள்

தொகுப்பாளர் :
டாக்டர் சாலை இளந்திரையன்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
புது டில்லி

செப்டம்பர் 1976 (ஆசுவீனம் 1898)
September 1976 (Aasuveenam 1898)

© உரிமை அந்தந்தக் கவிஞருக்கே

விலை : ரூ. 5-00

ANTHOLOGY OF INDIAN POETRY (TAMIL)

விநியோகிப்பாளர் :

பாரி நிலையம்,

1/59, பிராட்வே, சென்னை-1

PUBLISHED BY THE DIRECTOR, NATIONAL BOOK TRUST, INDIA, NEW DELHI-16 AND PRINTED AT THE STREE SEVA MANDIR PRESS, MADRAS-17.

# கால் நூற்றாண்டு

சுதந்திரத்திற்குப் பிறகு தமிழ்க் கவிதை என்னும் இந்தத் தொகுப்பு, கால வகையில் 1947 ஆகஸ்டுப் பதினைந்தாம் தேதியைத் தொடக்கமாகக் கொண்டது; கருத்து வகையில் அரசியல் விடுதலை என்னும் பெரிய வரலாற்று நிகழ்ச்சியின் பின்விளைவுகளுக்கான அறிகுறிகளைத் தொடக்கமாகக் கொண்டது.

1938 அளவிலேயே தமிழ்க் கவிதையில் தமக்கென ஒரு தனி இடத்தை ஏற்படுத்திக்கொண்ட பாரதிதாசன், 1964 வரை தமிழகத்தின் தன்னேரில்லாக் கவிஞராக விளங்கினர். 1947 முதல் சுமார் 1965 வரை பாரதிதாசனின் கவிதைப்பாணி தமிழ்க் கவிதையின் ஆற்றல் வாய்ந்த குரலாக விளங்கியது. சில நிலைகளில், இன்றுவரை கூட இந்தச் செல்வாக்கு இருந்தே வருகிறது.

இடைக்காலப் பழமையும் மதவழிப்பட்ட இலக்கியம், பண்பாடு, பழக்கவழக்கம் என்பவைகளையும் சரித்து, பழந்தமிழ் மனிதாபிமானப் பண்பாட்டை மீட்டு நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கில் பாட்டிசைத்தார் பாரதிதாசன். ஆரிய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு என்பனவும் தமிழ்ப் புகழ்ச்சி, பெண்ணுரிமை, சமநலச் சமுதாயம் என்பனவும் அவருடைய வேகமான கருத்துக்களாக வெளிப்பட்டன. இவைகளின் பின்விளைவு என்று அவர் கருதிய சோசலிசச் சமுதாய ஆக்கமும் அவருடைய நோக்காக ஒலித்தது. இதே காலக் கட்டத்தில் கவிமணி, நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதி போன்றவர்கள் இந்துமத வழிப்பட்ட பாரதப் பண்பு, இந்தியத் தேசியம் முதலியவற்றை வலியுறுத்திப் பாடி வந்தார்கள்.

இந்த இரண்டு நெறிகளின் விளைவாக, பாரதிதாசன் பாட்டு எதிர்க்குரல் கொடுக்கும் வல்லினப்பாட்டாக அமைந்திட மற்றவர்களின் பாட்டு ஏற்கனவே இருந்துவருவதை ஏற்றியும், அதனில் சிறிய செப்பங்கள் விரும்பியும் எழுந்த மெல்லினப் பாட்டாக அமைந்தது. இந்த இரண்டு விதமான பாட்டு முறை

களுக்கும் தமிழகத்தில் தனித்தனிப் பரம்பரைகளும் ஏற்பட்டன. வாணிதாசன், புலவர் குழந்தை, முடியரசன், பெருஞ்சித்திரன், சுரதா, பொன்னடியான், தமிழ்ஒளி, கோவேந்தன், கண்ணதாசன் போன்றவர்கள் பாரதிதாசன் நெறியில் பாட்டிசைத்தார்கள். ச. து. சு. யோகியார், தூரன், சோமு, கலைவாணன், சாலி வாகனன், கொத்தமங்கலம் சுப்பு, திருலோக சீதாராம், ரகுநாதன், தமிழழகன் போன்றவர்கள் அடுத்த நெறியைப் பின்பற்றினர்கள். இவர்களில் சிலர் காலப்போக்கில் அணி மாறியது உண்டு என்றாலும், இவர்களின் அடிப்படை நோக்கு இந்த இரு வேறு அணிகளுள் ஒன்றிலேயே ஊன்றி நிற்கிறது.

இந்த இரண்டு அணியினராலும் தமிழ்க் கவிதையின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பெரிய புதுமை ஏற்பட்டது. தனிக் கவிதை, கவிதைக் குறுங்கதை, காவியம் என்னும் கவிதைக் கதை, கண்டகாவியம் என்னும் ஒரு பாத்திர விரிப்புக் காவியம், பாநாடகம் முதலிய பல வடிவங்கள் தமிழ்க் கவிதையில் செல்வாக்குப் பெற்றன. இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை கவிதைத் துறையில் ஓரளவு அசூயை (TABOO) களாகக் கருதப் பட்டுவந்த அரசியல், சமூகச் சீர்திருத்தம், கடவுள் மறுப்பு, பெண்ணுரிமை முதலிய கருத்துக்களையும் தமிழ்க் கவிதை மிகுதியாகக் கையாளத் தலைப்பட்டது.

இந்தப் புதுமைகளால் கடந்த பல நூற்றாண்டுகளாகச் செல்வாக்குப் பெற்றிருந்த உலா, தூது, பரணி, பிள்ளைத்தமிழ் முதலான சிற்றிலக்கிய வடிவங்கள் அடியோடு வழக்கொழிந்து விடவில்லை; பலர் புதிய அரசியல் தலைவர்களை முதன்மைப்படுத்தி இந்த இலக்கிய வகைகளைப் பாடியே வந்தார்கள். காவியம் என்ற பெயரில், (பழைய காவியத்தின் பல உறுப்புகளைக் கைவிட்டுப்) புதுமையாகப் பாடப்பட்ட கவிதைக்கதை பாரதிதாசனால் பெருஞ் செல்வாக்குப் பெற்றபோதும், பழைய காவிய வடிவத்தை அப்படியே பின்பற்றும் முறையும் (1970 வரை) இருந்துதான் வந்தது.

1960-க்குப் பிறகு, பாரதிதாசன் செல்வாக்குக்கு உட்பட்ட இளைய தலைமுறையினரிடையே ஒரு புதிய அலை எழுந்தது. அது பாரதிதாசனில் முதன்மைப்பட்டு நின்ற தமிழ்ப் புகழ்ச்சி, ஆரிய எதிர்ப்பு என்பவைகளைக் கைவிட்டு, அவரிடமே முகம் காட்டிய பொதுமானுட விறு, தொழிலாளர் நலன், மதச்சார்பற்ற சமுதாய

ஆக்கம் என்னும் கருத்துக்களை முதன்மைப்படுத்தியது. இந்த அணியினரில் பொதுவுடைமைக் கட்சிச் சார்பு உடையவர்களான கே. சி. எஸ். அருணுசலமும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரமும்— கட்சிச் சார்பு இல்லாத குலோத்துங்கன், சாலை இளந்திரையன் ஆகியோரும் முக்கியமானவர்கள். இக்கால மனிதனின் பிரச்னைகள், மனிதகுலப் பெருஞ்சாதனைகள், இன்றைய மக்களின் இதயத்தை ஆண்டு கிடக்கும் இலட்சியம், என்னும் இவைகளுக்கு அழுத்தம் கொடுத்து, எதார்த்த நெறியில் பாடுவதே இவர்களின் நடை. இவர்களின் செல்வாக்கால் ‘மானுடம் பாடும் வானம்பாடிகள்’ என்னும் இளைய கவிஞர்களின் அணி ஒன்று உருவாகி வருகிறது. இந்த அணியிலேயே மார்க்சியச் சிந்தனை வழியினர், கற்பனுவாதக் கனவு நெறியினர் என்னும் இரண்டு அணிகள் பிரிந்து தெரிகின்றன. ஆனுலும்— இவர்களில் சிலர் விட்டகுறை தொட்ட குறையான பழம்போக்குகளின் செல்வாக்குக்கு அவ்வப்போது ஆளாகிருர்கள் என்பது தவிர— அடிப்படை நோக்கில் வேற்றுமை இல்லை.

கவியரங்கம் என்னும் நிகழ்ச்சிக்கு ஏற்பட்டுள்ள பெருஞ்செல்வாக்கால் தமிழ்க் கவிதைக்கு ஓர் எளிமை கிடைத்திருப்பதோடு புதிய நகைச்சுவையும் வளர்ந்து வருகிறது. திரைப்பாடல்களின் மிகுதி தமிழ்க் கவிதையில் மெல்லிசைப் பாடல்களை ஒத்த சில புதிய வடிவங்களை உண்டாக்கியுள்ளது. கட்சி அரசியல்— கவி அரங்கின் வழியாகப் புகுந்து— தமிழ்க் கவிதையை அலைக்கழிக்கிறது என்பதை மறுக்க முடியாது. ஆனுலும் கட்சிகளின் நேரடிச் செல்வாக்கை மீறியதும், அறிவுவளப் பொதுமைநல நெறியினதுமான கவிதை தமிழில் ஒலித்துத்தான் வருகிறது. இந்தக் குரலுக்கு வன்மை சேர்க்கும் இளந் தலைமுறையினரும் வந்துகொண்டே இருக்கிருர்கள்.

வரலாற்றுத் தடத்தில் தமிழ்க்கவிதை கடந்த 25/26 ஆண்டுகளில், எவ்வெவ்வாறு யார்யாரால் இயக்கப்பட்டுள்ளது என்பதை ஒருவாறு காட்ட முயல்வதே இந்தத் தொகுப்பின் நோக்கம். ஆதலால் கருத்து வகையிலும் சொல்முறை வகையிலும் இரட்டிப்பு ஏற்படுவது கூடியவரை தவிர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரின் கவிதையும், அவருடைய நடை இயல்பையும் கருத்து நோக்கையும் காட்டும்வகையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

கவிஞர்களைப் பற்றிய குறிப்பு, அவரவருடைய பாணி உருவான பின்னணியைக் காட்டும் வகையில் தரப்பட்டுள்ளது. பல நூறு கவிதைகளும், பல கவிதைப் புத்தகங்களும், வேறு துறைப் புத்தகங்களும் வெளியிட்டுள்ள ஒருவரை ஒரே ஒரு சிறிய பாடலைக் கொண்டு தெளிவாக உணர இயலாது என்பதாலேயே (மதிப்பீட்டுக்குரல் தொனிக்கும்) இந்த அறிமுகக் குறிப்பு இணைக்கப்பட்டது.

ஒரு கவிதைத் தொகுப்பை எடுத்து வைத்துக்கொண்டு, "இந்த முறையிலேதான் கவிதைகள் தொகுக்கப்பட வேண்டுமா?" என்று கேள்வியை எழுப்பினால்—அதற்கு, "ஆம்" என்று யாருமே பதில் சொல்ல முடியாது. அந்த அளவிற்கு, ஆயிரமாயிரம் திசைகளில் கால் பரந்து, மக்களுக்குக் களிப்பையும் பயனையும் விளைவித்துச் செல்வது கலைப் படைப்பு! அவைகளுள் ஒரே ஒரு திசையில், ஒரே ஒரு நடையில் செல்வது இந்தத் தொகுப்பு என்றே கொள்ள வேண்டும். மாலைகளை எத்தனை பேர் எத்தனை விதமாகத் தொடுத்தால் என்ன? அவைகளை ஆக்குவன எழிலும் மணமும் தாங்கி எழுந்து சிரிக்கும் நறுமலர்களே அல்லவா?

— சாலை இளந்திரையன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| கால் நூற்றாண்டு | | iii |
| 1. கவிமணி | | |
| உழைக்க வேண்டும் | ... ... | 1 |
| 2. நாமக்கல் கவிஞர் | | |
| கற்பகச் செடி | ... ... | 3 |
| 3. பாரதிதாசன் | | |
| என் வீட்டில் நீ | ... ... | 4 |
| 4. சுத்தானந்த பாரதியார் | | |
| சுதந்திரம் வேண்டும் | ... ... | 7 |
| 5. ந. பிச்சமூர்த்தி | | |
| குமாஸ்தா பாட்டு | ... ... | 9 |
| 6. ச. து. சு. யோகியார் | | |
| காலனார் படை சீறுது! | ... ... | 11 |
| 7. அ. சீனிவாசராகவன் | | |
| கண்ணைத்தா | ... ... | 13 |
| 8. புலவர் குழந்தை | | |
| கடுங்கோன் வெற்றி | ... ... | 15 |
| 9. வெள்ளியங்காட்டான் | | |
| துணிவு | ... ... | 17 |
| 10. பெ. தூரன் | | |
| ஆருடைய குழந்தை? | ... ... | 19 |
| 11. கொத்தமங்கலம் சுப்பு | | |
| அண்ணன் தம்பிகள் | ... ... | 21 |
| 12. ஜே. தங்கவேலு, 'சுரபி' | | |
| சக்தி பிறக்குது! | ... ... | 23 |
| 13. வாணிதாசன் | | |
| ஆறு | ... ... | 25 |
| 14. கம்பதாசன் | | |
| பிச்சைக்காரன் | ... ... | 27 |
| 15. கலைவாணன் | | |
| வேனிலாள் | ... ... | 28 |

பக்கம்

16. திருலோக சீதாராம்
*மூலப் பிரதி* ... ... *31*

17. துரை மாணிக்கம்
*மறம் (தாய் கூற்று)* ... ... *33*

18. முடியரசன்
*தமிழ் - என் மனைவி* ... ... *35*

19. கே. சி. எஸ். அருணசலம்
*வெற்றிப் பயணம்* ... ... *37*

20. எஸ். டி. சுந்தரம்
*சிங்கநாதம் கேட்குது!* ... ... *39*

21. சுரதா
*மயில்* ... ... *41*

22. சோமு
*தாமரையின் தவம்* ... ... *43*

23. சி. ரகுநாதன்
*ஒற்றையடிப் பாதை* ... ... *45*

24. தமிழ் ஒளி
*நெய்வேலி* ... ... *47*

25. ஆனந்தம்
*பிழை திருத்தம்* ... ... *49*

26. கண்ணதாசன்
*வேளை வரவில்லை* ... ... *51*

27. குலோத்துங்கன்
*வாயில் திறக்கட்டும்!* — ... *53*

28. தமிழழகன்
*காலைக் கன்னி* ... ... *55*

29. சாலை இளந்திரையன்
*எல்லை விரிகிறது* ... ... *57*

30. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
*இந்த நாள் நிலைமை* ... ... *59*

31. முருகுசுந்தரம்
*கட்டாரி நீட்டுகின்ருர்!* ... ... *6.1*

32. மின்னூர் சீனிவாசன்
*பரிசளிப்பு* ... ... ... *63*

பக்கம்

33. சிற்பி
*வாத்தியாரு வேலை* ... ... 65

34. அப்துல் ரகுமான்
*வ. வே. சு. ஐயர்* ... ... 67

35. மீ. இராசேந்திரன்
*வேலை இருக்கிறது நிரம்ப* ... ... 69

36. அய். உலகநாதன்
*சென்றாய், கொன்றாய்!* ... ... 71

37. பொன்னடியான்
*ஒரு காவியம் கனியுது!* ... ... 72

38. தமிழன்பன்
*விண்மீன்கள்* ... ... 74

39. கோ. மோகனரங்கன்
*சாக்காட்டின் மூலையிலே!* ... ... 76

40. குருவிக்கரம்பை சண்முகம்
*சிவப்பு மலர்கள்* ... ... 78

41. நா. காமராசன்
*குழந்தை* ... ... 80

*கவிஞர்களைப் பற்றி* ... ... 81

# உழைக்க வேண்டும்

கவிமணி

மன்னும் சுதந்திரத்தை—நாட்டில்
மக்கள் அடைந்தவுடன்
பொன்னை மழையாக—வானம்
பொழிந்து கொட்டிடுமோ?

பாலை சோலையாகிக்—கனிகள்
பழுத்து திர்ந்திடுமோ?
சேலை சேலையாகப்—பருத்திச்
செடிகள் காய்த்திடுமோ?

ஆக்கம் வேண்டுமெனில்—நன்மை
அடைய வேண்டுமெனில்,
ஊக்கம் வேண்டுமப்பா—ஓயாது
உழைக்க வேண்டுமப்பா!

உண்ணும் உணவுக்கும்—இடுப்பில்
உடுக்கும் ஆடைக்கும்
மண்ணில் அந்நியரை—நம்பி
வாழ்தல் வாழ்வாமோ?

நெற்றியின் வியர்வை—நிதமும்
நிலத்தில் வீழ்ந்திடிலே
சற்றும் வாடாமல்—சுதந்திரம்
தழைத்து வளருமப்பா!

ஜாதிச் சண்டையெல்லாம்—ஒய்ந்து
தணிய வேண்டுமப்பா!
நீதி நாடெங்கும்—நிலைத்து
நிற்க வேண்டுமப்பா!

உலக மக்களெல்லாம்—அன்போடு
ஒருதாய் மக்களைப்போல்
கலகமின்றி வாழும்—காலம்
காண வேண்டுமப்பா!

# கற்பகச் செடி

## நாமக்கல் கவிஞர்

சுதந்தரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகந்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்தரம் இருந்தால்தான்.
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்தரம் அதுவேண்டும்!

சோறும் துணிமணி சுகங்களைக் காட்டிலும்
சுதந்தர உணர்வே மேலாகும்.
கூறும் நலங்களை விலைகொடுத் தாயினும்
கொள்ளத் தகுந்தது சுதந்தரமே!
வீறும், கருணையும், வித்தக ஞானமும்
விளைவது சுதந்தர விருப்பத்தால்.
தேறும் பொழுதினில் சுதந்தரம் தொழத்தகும்
தெய்வம் என்பது தெளிவாகும்!

உத்தமன் காந்தியின் மெய்த்தவ பலத்தால்
உலகம் இதுவரை கண்டறியாச்
சுத்தநல் வழிகளில் சுதந்தரம் அடைந்தோம்:
சொல்லரும் பாக்கியம் நமதாகும்.
கைத்தலம் கிடைத்துள கற்பகச் செடிஇதைக்
காயவும் கருகவும் விடமாட்டோம்;
சத்திய சபதம் பக்தியில் காப்போம்,
சர்வே சன்துணை புரிந்திடுவான்!

# என் வீட்டில் நீ

பாரதிதாசன்

கெண்டை விழியாளே—அடி
இன்னே மொழியாளே,
கொண்டையிலே பூவும்—உன்
கோணே நெடுவாக்கும்!

தண்டையிலே பாட்டும்—உன்
தாழ்அடியில் கூத்தும்
கண்டவுடன் காதல்—நான்
கொண்டேனே உன்மீதில்!

மாற்றுயர்ந்த பொன்னே—அடி
மாணிக்கமே கேளாய்!
சோற்றை மறந்தேனே—அடி
தூக்கமில்லை மானே!

உன்நினைப்புத் தானே—அடி
ஊற்றெடுத்த தேனே!
என்னைக் கொல்லுதேடி—அடி
ஏதுக்கிந்த மோடி?

சின்ன வயதாளே—அடி
சிரித்த முகத்தாளே,
அன்ன நடையாளே—நல்ல
அச்ச இடையாளே!

வருத்தம் இல்லை பெண்ணே—என்
மாமிக்கும் என்மேலே!
கருத்தும் உண்டு மாமன்—என்னைக்
கட்டிக்கொள்ளச் சொல்வான்,

சிரிப்பு மலர் வாயால்—அடி
தெரிவி ஒரு பேச்சே.
கருத்தை உரை கொஞ்சம்—பெண்ணே
கல்லடி உன் நெஞ்சம்!

எரிந்ததடி மேனி—பெண்ணே
இனிப்பொறுக்க மாட்டேன்!
புரிந்தனை இந் நேரம்—அடி
பொல்லாத ஒட்டாரம்!

பூட்டி வைத்த வீட்டின்—அடி
புது விளக்கும் நீயே!
மாட்டி வைத்த கூட்டில்—அடி
மணிக் கிளியும் நீயே!

போட்டு வைத்த சம்பா—இனிப்
பொங்கி டும்உன் னாலே!
கூட்டி வைத்த வீட்டின்—நல்ல
குடும்ப விளக் காவாய்.

கூண்டுவண்டி கட்டி—நாம்
கூடலூர் அடைந்தால்,
பாண்டியன் குடும்பம்—என்று
பார்த்து மகிழ்வார்கள்!

தாண்டு நடை போட்டு—நாம்
தகதகென்று போனல்,
மாண்ட நெடுஞ் சோழன்—அவன்
வளர்குடும்பம் என்பார்!

தையல் என்றன் வீட்டில்—நீ
சமையல் செய்யும் போதுன்
கையழகு பார்த்து—நான்
களித் திடுவேன் பெண்ணே!

கையில் விளக் கேந்தி—நீ
கடைசி அறை போவாய்.
பொய் யல்லவே பெண்ணே—மிகப்
பூரிக்கும் என் மேனி!

இட்டது நீ சட்டம்—என்
இன்பப் பெருமாட்டி!
விட்டுப் பிரியாதே—எந்த
வேளையிலும் மாதே!

ஆறுதலைச் செய்வாய்—என்
அண்டை யிலிருந்தே!
மாறிடுமோ கண்ணே—நம்
வாழ்க்கையிலே எண்ணம்?

மாறும்படி செய்வார்—இவ்
வையகத்தில் இல்லை!
ஊறுதடி அன்பும்—பெண்ணே
ஓங்கிடுதே இன்பம்!

# சுதந்திரம் வேண்டும்

## சுத்தானந்த பாரதியார்

சுதந்திரம் சுதந்திரம் சுதந்திரம் வேண்டும்.
சூரருக் கருள்செய்யும் பாரதத் தாயே!
பதமிழந் தழிந்திடும் பாரத மக்கள்
பண்புடன் வாழ்ந்திடப் பலமருள் வாயே!

பால்வளம் தேன்வளம் பாலிக்கும் நாட்டில்
பஞ்சம்வந் தெம்முயிர் பறித்தலு மாமோ?
வேல்வளம் பெருகிய வீரரின் நாட்டில்
வெறுமையும் சிறுமையும் வறுமையு மாமோ?

கண்குளிர் வனப்புள கற்பக நாட்டில்
கண்ணீர்விட் டேழைகள் கதறிட லாமோ?
புண்களைத் துடைத்திடும் புகலெமக் கிலையோ?
புத்தரின் சந்ததி புழுக்களின் விலையோ?

கார்முக ராமரும் கண்ணனும் விஜயன்
கந்தனும் அரக்கரைக் கலக்கிய நாட்டில்
சோர்முகச் சொத்தைகள் சத்தமிட் டென்னே?
துணிவுள்ள தீரரின் அணிவகுத் திடுவாய்!

தெள்ளறி வானநின் உள்ளறி யுண்மை
செயல்பெற நயமுறு சுதந்திரம் வேண்டும்!
வள்ளல்கள் ஓங்கிட வரிப்புலி மிரட்டா
வண்மை வளர்ந்திடச் சுதந்திரம் வேண்டும்!

சங்கந லத்துடன் தனிநபர் உரிமையும்
தாழாத் தருமத்தின் சுதந்திரம் வேண்டும்.
சிங்கம்போல் எழுந்துநாம் செகப்புகழ் பெறவே
திருக்குறள் வழிவாழும் சுதந்திரம் வேண்டும்!

மனிதரை மனிதர்நன் மனிதராய் மதிக்கும்
மாண்புள்ள மங்கல சுதந்திரம் வேண்டும்.
கனிதரும் பொழிலெனக் கலந்தினி வாழும்
கண்ணிய சுதந்திரம் மண்மிசை வேண்டும்!

இதயத் துடிப்புடன் இணைந்திடும் உயிர்போல்
இசையுடன் கருவிகள் இணைவது போலே
உதயக் கதிருடன் ஒளியிணைப் போலே
ஒன்றும் சுதந்திரம் நன்றாக வேண்டும்!

சுதந்திரம் சுதந்திரம் சுதந்திரம் வேண்டும்,
தூயவர்க் கருள்செய்யும் தொல்பெருந் தாயே!

# குமாஸ்தா பாட்டு

## ந. பிச்சமூர்த்தி

குற்றம் எதுவும் நானறியேன்;
குந்தும் சிறையை நானறியேன்;
ஒற்றர் எவரும் நானறியேன்;
ஒண்டிப் பயந்து நானறியேன்...
பற்றும் இருட்டுக் கொட்டடியில்
பலநாள் வாழ்ந்தும் சோர்வடையா
வெற்றி வினைஞன் நானன்றே!
வீரச் சிங்கம் நானன்றே!

அன்னை வயிற்றில் சிறையுண்டேன்;
அருணன் மதியம் அங்கேது?
பின்னர் உடம்பின் விலங்கிட்டார்;
பெரிய நாளக் கட்டிட்டார்!
தின்ன எனக்குத் தென்பில்லை;
திணிக்க அன்னை முற்பட்டுச்
சின்ன உயிரின் காவலனுய்ச்
சிறந்த கொடுமை செயலுற்ருள்...

இல்லம் நடத்தி அதனூடே
இன்பம் சுயேச்சை நான்தேட,
அல்லும் பகலும் பணமென்னும்
அரவம் என்னைச் சூழ்ந்திடவும்,
தில்லும் மல்லும் திரிசமனும்
திணிந்த உத்யோகத் துறையில்
மெல்லப் புகுந்து வேர்தேடி,
மேலும் மேலும் துயருற்றேன்...

சிறையைத் தவிர்க்க வகை அறியேன்,
சிறுத்துச் சும்மா வாழுங்கால்,
"இறைவன் என்ப தோர்கனவு,
ஈயார் பிறரை ஏமாற்ற!
குறையை ஒழிக்க வழிஒன்றே
கூசாப் புரட்சி" என்றுபலர்
இரவில் பாடும் தவளைகள்போல்
இசைக்கும் ஓசை செவியுற்றேன்...

குந்தக் குடிசை இல்லாதோர்,
கூலிக் குழைத்தும் காசற்றோர்
அந்தி மயக்கில் திரும்பும்கால்—
ஆடல் பாடல் மேடைகளை,
பந்தி விளக்கை, பந்தடியை,
பணக்கா ரர்கள் பொய்ப்பேச்சைச்
சந்தி சிரிக்க ஏசுவதும்
கண்டு சலித்தேன், கல்லானேன்...

நாட்டில் நகரில் உலகெங்கும்
நன்மை காணார் கண்டபடி
வீட்டில் கட்டுப் பாடுகளை
வீழ்த்த முனைந்து குமுறுவதும்,
வீட்டில் வளரும் பணக்காரர்
விமலன் அருளைப் போற்றுவதும்,
கூட்டில் உருகும் கிளியாக்கிக்
குன்றச் செய்த நெஞ்சுடைந்தேன்....

"கருப்பை விட்டு வெளியேறக்
கடுமை மிகுந்த வலிஉண்டேல்
நெருப்பை நெஞ்சில் எழவைக்கும்
வறுமை நீங்க வழிஇலையோ?
அருங்கைச் செல்வி மண்ணன்னை
அவனிக் கீயும் எண்திருவை
விரும்பும் வகையில் பொதுவாகப்
பகிரா விட்டால் விடிவேது?"

# காலனுர் படை சீறுது!

ச. து. சு. யோகியார்

தலைகள் உடைபட உடல்கள் கிழிபடச்
சதைகள் அறுபட நடக்குது—
நிலைகள் அவைகெட நெடிய படைபட
நெறுநெ றென்றுபோர் தொடுக்குது!

குருதி நதியினில் கொடிய தலைபல
குமிழி போலவே மிதக்குது—
பொருது குதிரைகள் உயிரை விடுமுனே
புடைபு டைத்துமே குதிக்குது!

கையி னொடுகை காலி னொடுகால்
மெய்யி னொடுமெய் யணைக்குது—
தொய்யும் வேர்வையில் நெய்யு மேனிகள்
துவைய லாகவே குணைக்குது!

வாளி னொடுவாள் வேலி னொடுவேல்
கேட யங்களைப் பிளக்குது—
காளி னொடுகோள் கொடிய கோளராக்
கூள மாகவே கிளைக்குது!

எனினு மேசிலர் பலர்க ளோடுதான்
எதுவரைக் கும்போர் தொடுப்பதே?
துணிவு கூடினும் முனிவு கூடினும்
துணையி லாவிடில் படுப்பதே!

நூறு படைகள்முன் னேறு படைசில்
துளி யெங்ஙனம் வெற்றியே?
சீறு சூறைமுன் வீறு விசிறியும்
தேறி நிற்குமோ பற்றியே!

ராணி யின்படை கதிக லங்குது;
ராக்க தர்படை மீறுது—
காணி லோர்கணம் தானி ருக்குது;
கால னூர்படை சீறுது!

# கண்ணாத்தா

அ. சீநிவாசராகவன்

*கையிற் பனங்கூடை ஊசலிட, தொங்கும்*
*காதினில் பாம்படம் பூசலிட,*
*பையை இடுப்பிலே தொய்யவிட்டு முத்துப்*
*பல்லால் மயக்குவள் கண்ணாத்தா...*

*கன்னங் கரிய முகக்குளத்தில் நீண்ட*
*கார்விழி வாளை கறங்கிடவே;*
*மன்னப் பெரிய முலைக் குவட்டில் சேலை*
*மாட்டி வளைத்துச் சரிந்திடவே,*

*சேற்றில் குனிந்துகால் முள்ளெடுத்தே என்தன்*
*சிந்தையில் குத்திச் சிரித்திடுவாள்.*
*காற்றினைப் போலஎன் கையிற் சிக்காமலே*
*காட்டில் மறைகுவள் கண்ணாத்தா...*

*காட்டுவெளி அவள் காவலிடம்; கம்பு*
*காக்கும் பரண்அவள் கன்னிமடம்;*
*சேட்டைசெய்தால் ஒட்ட வாலைவெட்டும் வெற்றிக்*
*கோட்டை அவள்செல்லும் பாட்டைத்தடம்.*

*நீல வளையல் கிலுகிலுக்கக் கரு*
*நீள விழிகள் சிலுசிலுக்க,*
*ஆல மரத்து விழுதினிலே அதோ*
*ஆடும் கொடிஎன்தன் கண்ணாத்தா...*

*காளி மகமாயி காரணத்தி மெத்தக்*
*கற்பனைக் காரிதான் ஆனாலும்*
*தேளின் கொடுக்கெனக் கொட்டும்இவள் சொல்லில்*
*தேன்கள்ளை வைத்ததும் எப்படியோ?*

கன்னல் கருப்பாயோர் கன்னி வடிவினில்
காரைச் சுமந்து நடந்துவந்தால்,
மின்னல் கருப்பாய்த் துவண்டு வந்துவயல்
மேட்டினிலே களிகூட்டு மென்றால்,

விந்தை அதுவேஎன் கண்ணாத்தா, என்தன்
வேகும் நெஞ்சின்வெறி கண்ணாத்தா;
சொந்த மாமன்மகள் ஆனாலும் படு
சுட்டிஅவள் என்தன் கண்ணாத்தா!

# கடுங்கோன் வெற்றி

புலவர் குழந்தை

*நன்றுநன் றென்றசொல் வந்தது—பாண்டி*
*நாடே குமுறியெ ழுந்தது.*
*வென்றி மடந்தையை ஏத்தினர்—தமிழ்*
*மேலவர் வெல்கென வாழ்த்தினர் !*

*வீரர்கள் வீறிட் டெழுந்தனர்—மலர்*
*வேம்பொடு வஞ்சி புனைந்தனர்.*
*காரின் முரச மதிர்ந்தது—தமிழ்க்*
*கன்னியின் உள்ள முவந்தது...*

*கோளரி போல எழுந்தனன்—கடுங்*
*கோனெனும் பாண்டிய மன்னவன்*
*வாளரி வீரர் தொடர்ந்தனர்—ஆக*
*மதுரையை நோக்கி நடந்தனன் !*

*பகைவ ருடற்றசை தின்னவே—வானிற்*
*பருந்துகள் செல்லுத லென்னவே*
*தொகைவகை யாகத் தமிழ்க்கொடி—தோம்*
*தோமென வேசென்ற தப்படி !*

*இடியெனச் சங்கு தழங்கின—கார்*
*என்ன முரசு முழங்கின.*
*வெடியெனக் காலடி முன்னின—வாளும்*
*வேலும் பளீரென மின்னின !*

*வண்ணக் கொடிக்கையை ஆட்டியே—எம்மீர்*
*வாருங்கள் என்றுவப் பூட்டியே,*
*திண்ணிய பொன்வாய் குழைத்தனள்—தமிழ்த்*
*தென்மது ரைத்தா யழைத்தனள்...*

கண்டு பகைவ ரெதிர்த்தனர்—களங்
காணலா மோவென் றதிர்த்தனர்!
தண்டமிழ் வீரர்க ளூக்கினர்—காலத்
தழலெனப் பாய்ந்துமே தாக்கினர்!

ஊக்கித்தாக் கிக்களங் கொண்டனர்—தோற்
றோடும் பகைப்புறங் கண்டனர்.
வீக்கி நகைத்துக்கை கொட்டினர்—கோயில்
மீது தமிழ்க்கொடி கட்டினர்!

மின்னென வேம்பு மலர்ந்தது—வானில்
வென்றி முரச மதிர்ந்தது.
ஒன்னலர் ஆட்சி யொழிந்தது—மதுரை
உள்ளும் புறமும் உவந்தது...

# துணிவு

## வெள்ளியங்காட்டான்

பிஞ்சு நாட்பட முற்றிக் கனிந்ததும்
பிணைப்பு நீங்கி உதிர்ந்திடும் காட்சியை
நெஞ்சில் ஊன்றி உணர்ந்ததன் பின்புதான்
நீணி லத்தினில் வாழத் துணிகிறேன்.

அற்ப மான செடியின் அடியிலே
அடையும் ஆறுதல் அற்பமே யாதலால்
கற்பகத் தரு நீழலை வேண்டியே
கதிரவன் வெப்பம் தாங்கத் துணிகிறேன்.

வீழ்ந்த போதில் இறந்திடு வாயென
வீணர் கூக்குரல் போட்டுத் தடுப்பினும்
ஆழ்ந்த கல்விக் கடலில்வெண் முத்துகள்
அடைய வேண்டிக் குதிக்கத் துணிகிறேன்.

ஆல காலம் படர்ந்தது வோவென
அனைத்து மேகமும் ஒன்று திரண்டுநல்
நீல வானம் முழுவதும் மூடினும்
நிலவு மிழ்மதி யாகத் துணிகிறேன்.

மூடர் தங்கள் மனமெனும் காட்டிலே
மூர்க்க எண்ணப் புலிகள் எதிர்த்திடின்
ஏடு தன்னையோர் வில்லென ஏந்தியே
இனிய சொற்கணை எய்யத் துணிகிறேன்.

சின்னஞ் சிறுமொட்டு
    சிரித்துமகிழ்ந் தாடாமல்
கொன்னி இதழ்பிதுக்கிக்
    குலேகின்ற காரணம்என் ?

    ஆருடைய குழந்தைஇது...

பூவுலகைப் பார்க்கவந்த
    பொன்னுட்டுத் தூதெனவே
மேவுமிளங் குழந்தையழ
    விடலாமோ ? விண்ணேர்கள்
தாமிதனைச் சகிப்பாரோ ?
    தடத்தருகே மைந்தனழத்
தேவியரன் தன்னேடும்
    தேடிவந்த தறியீரோ ?

    ஆருடைய குழந்தைஇது...

# அண்ணன் தம்பிகள்

## கொத்தமங்கலம் சுப்பு

*நீலக் கடலைச் சேலைகட்டி*
*நெடு மலை முடிதரித்தவள்*
*கோலக் குமரி கையிலேசெங்*
*கோலை ஏந்தி நிற்கிருள்.*
*பாலைப் பொழியும் பசுவும் நல்ல*
*பச்சை செழிக்கும் நிலங்களும்*
*சோலை மலரும் சுரங்க நிதியும்*
*சொரியக் காத்திருக்கிருள்.*

*நாற்பத்தெட்டு கோடிச்செல்வம்*
*நம்மைப் பெற்ற தாயவள் ;*
*காப்பதற்குப் பிள்ளையென்று*
*களித்து நிற்கும் தூயவள்,*
*''எண்ணெயுண்டு கனிகளுண்டு ;*
*என்ன வேண்டும், தருகிறேன்.*
*எண்ணம்மட்டும் இருப்பின்தோண்டி*
*எடுத்துக் கொள்ளும்'' என்கிருள்.*

*ஊடும்பாவும் ஓட்டிநெய்த*
*கோடி வேட்டி ஒன்றிலே*
*உள்ளநூல் பல்லாயிரங்கள்*
*ஒன்று போலே இருக்குது.*
*இழையில்ஒன்று பிழைபட்டாலும்*
*எடுத்து உடுத்த முடியுமா ?*
*இதையறிந்து எந்தநாளும்*
*இதயங் கூடி வாழுவோம் !*

ஐயன் அடிநிழல் வீற்றிருந்தே—அவன்
ஆசை நிறைவேறச் செய்திடுவோம்!
கையிற் கிடைத்த கனியதனை—உண்டு
கற்ப காலம்மட்டும் வாழ்ந்திடுவோம்!

சாந்தியென் றென்றும் முழங்கிடும் மந்திரம்
சகல திசையும் பரப்பிடுவோம்.
காந்தமலை யெங்கள் காந்தி வதனத்தில்
காந்தி நிலைபெறச் செய்திடுவோம்!

# ஆறு

## வாணிதாசன்

விண்ணிடை எழுந்த முகில்களின் பேய்ச்சல்
 விளைவினால் குறிஞ்சியில் பிறந்து,
கண்ணிடை பருவி மலையிடை மருவிக்
 கடந்தனை; முல்லையில் ஓடிப்
பண்ணிடை கூட்டி மருதமாம் நாட்டில்
 பலகிளை ஓடைகள் சேர,
விண்ணிடை நீலம் மேவிய கடலுள்
 மேவினை வழியறிந்(து) ஆறே!

வயலிடைப் புகுந்தாய்; மணிக்கதிர் விளைத்தாய்;
 வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
 ஆம்பலின் இதழ்களை விரித்தாய்;
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
 கரைவளர் தென்னையில் பாயப்
பெயலிடைப் பட்ட வானெனத் தோன்றும்
 பெருங்குளம் நிறைத்துவிட் டாயே!

வழியினில் கண்ட மண்வளம் யாவும்
 வணிகனைப் போலுடன் ஈட்டிக்
கொழித்தனை மருதம்; விளைத்தனை; மீண்டும்
 கொள்முதல் செய்தவை யாதாம்?
கழியினில் தேங்கி உப்புடன் கலந்தாய்;
 கடலிடை விரைந்துமே ஓடி
அழிந்தனை ஆறே! அலைகட லுலகில்
 அழிவது பிறப்பதின் வித்தாம்!

# வேனிலாள்

## கலைவாணன்

வெந்தழலை வெயில் சிந்திய தாலே
வெம்பித் துடித்திடும் அம்புவி மாதின்
நொந்து புண்ணாகிய சுந்தர மேனி
நோக்கிய வேனில்நோய் போக்கமுன் வந்தாள்.

கோலங் குறுகிய ஞாலக் குமாரிக்
கோயிலுக் குள்வரும் ஆயிழை யோடு,
காலத்து வீதியில் கைகளைக் கோத்துக்
காற்றவ ராயனும் காணவந் துற்றான்!

ஏங்கியும் தேங்கியும் இத்துணை நாட்கள்
மாங்கிளை மீதினில் தூங்கிக் கிடந்த
பூங்குயிலன் மனப் பூரிப்பி னோடும்
தீங்குரல் வீணையைத் தாங்கிமுன் வந்தான்!

(வேறு)

மின்னிடும் மேற்றிசைப் புன்னகை சிந்திட
மெல்ல உலாவி வரும்
கன்னி வசந்தியின் கட்டழகில் மனங்
காமப் பரவசனாய்ச்
சன்னக் குரலினைத் தன்னிகரற்ற தோர்
சாரங்கி யாக்கி யதில்
இன்னிசை மீட்டி வரும்குயிற் பாவல,
ஏனிப் பதட்ட மையா?

நாட்டினில் யாருமே கேட்டு மகிழ்ந்திடும்
நாட்ட மில்லா ரெனினும்
காட்டி லுயர்மரக் கோட்டி லமர்ந்துள
கற்பனை யாழிலிசைப்

பாட்டை எழுப்பிப் பறந்து திரிந்திடும்
பாணர் குலத் தமிழா,
ஏட்டி லெழுத்தினில் கூட்டவுன் பாட்டினுக்
கேற்ற சொல்லே இல்லையே!

## (வேறு)

இந்த வழியே இதோ எழுந்து வருகின்றாள்
எண்ணரிய காடுகளும் நாடுகளும் தாண்டி!
அந்தர மிருந்துவருஞ் சுந்தரியை யொப்ப
ஆடிமணல் வீதிவழி ஓடிவரு கின்றாள்!

உந்திய தோர் பந்தனைய சிந்தையது துள்ள
ஓங்கியுள வெற்புகளின் பாங்கினிலு மெள்ளக்
கந்தமலர்க் கொத்தையலைக் கைகள்பல கிள்ளக்
காதலனைத் தேடிநதித் தேவிவரு கின்றாள்!

இத்தனையும் தாண்டியதோ இன்பமுறும் ஆசை
எத்திவிட வெண்மணலில் நித்தலும் விரைந்து,
தத்திமிதி என்றஇசைத் தண்டைகள் முழங்கத்
தாவியும் தவழ்ந்தும்நதித் தேவிவரு கின்றாள்!

## (வேறு)

சுள்ளென் றடித்திடும் மேற்றிசைக் காற்றிலே
சோர்வுற்ற நெஞ்சிலோர் ஆர்வந் துளிர்த்திடத்
துள்ளிக் குதித்தெழும் மள்ளர் மிடுக்கையும்
தொண்டது வேயுருக் கொண்டதாய் முன்செலும்

கள்ளமில் லாமனக் காளைகள் போக்கையும்
கண்டதும் நெஞ்சினில் கிண்டும் உணர்ச்சியின்
வெள்ளப் புதுப்புனல் மெள்ளப் பராவிட
வீணென்ற சோம்பரோர் ஆண்மையில் விட்டது!

எண்ணமென் னும்களர் மண்ணுள் புகுந்தநான்
இச்சைஏர் கொண்டொரு முச்சா லடித்தபின்,
விண்ணில் கிடைத்தவோர் வித்திட்டு நாற்புறம்
வேதனை முள்ளினால் வேலியுங் கட்டினேன்;

இருந்த இடத்தில் இருந்த படிஅவ்
இன்னிசை கேட்டே இருந்தேன் இங்கு
வரும்போ தெனக்கு வழித்துணை யாக
வந்தது, இடையில் வழிப்பறி போக!

முன்பொரு பாடல் எழுதினேன்...

ஏட்டுப் பிரதியை எடுத்தவர் தந்தால்,
இனிய பாடலைக் கற்றவர் சொன்னால்,
காட்டில் இருளைக் கடந்திட லாகும்,
கருணை செய்தவர் ஆவீர், ஐயா!

முன்பொரு பாடல் எழுதினேன்— அந்த
மூலப் பிரதி கைவசம் இல்லை....

# மறம் (தாய் கூற்று)

## துரை மாணிக்கம்

உற்றார்க் குரியளல்லள்; ஓங்குயர்நூல் செப்பமுறக்
கற்றார் வியக்கும் கலைவிளக்குஞ் செந்தமிழ்நாப்
பெற்றார்க் குரியளெம் பெண்.

கத்துகடல் சூழுகின்ற கன்னித் தமிழகத்துப்
புத்திளைஞீர்! நும்மிலொரு போதான் எவனவனே
முத்துவன்மொய் கூந்தன் முகம்.

வாயுண்ணல் நற்றமிழே வாழ்ந்துபடல் செந்தமிழ்க்கே
ஏயுமுளம் அற்றை இளந்தமிழ்க்கே என்பான்மேல்
மேயுமிவள் கண்ணென்னு மீன்.

செந்தமிழில் வல்லாற்கே செம்பொருளைக் கண்டாற்கே
அந்தமிழ்க்கே வாழ்வை அமைத்தாற்கே எந்நாளுஞ்
சொந்தமிவள் செங்கனிவாய்ச் சொல்.

ஆய்ந்தார் புடைசூழ ஆய கலைமுற்றும்
வாய்ந்தார் மருங்கமர வண்டமிழில் நன்னெஞ்சந்
தோய்ந்தார்க் குரியதிவள் தோள்.

வணங்குவாய்ச் செந்தமிழில் வல்லான் எவனோ
பிணங்குசெங் கைதள்ளிப் பின்கூடும் பேதைச்
சுணங்குமுலைத் தாலியவன் சொத்து.

சற்றும் தயங்குவதில்! சார்ந்தாரை எண்ணுவதில்!
முற்றும் உளந்தோயும் முத்தமிழில் வல்லானைப்
பற்றுமென் பாவையிளங் கை.

மயங்காத் தமிழ்க்கல்வி மாந்துபுகழ் மேவி
வயங்கும் இளையானை வஞ்சியிடை தோய
முயங்கும் மகள்மென் முலை.

தட்டுவினை யாச்செந்தா தாழாமல் தண்டமிழ்ப்பா
கொட்டுதமிழ்க் கோவையிளங் காளையற்கே எஞ்ஞான்றுங்
கிட்டுமிவள் மார்புக் கிடை.

தணிவடையாச் செந்நாவின் தண்டமிழ்நூல் கற்றுப்
பணிவுடைய பாவலற்குப் பாவையவள் செம்பொன்
மணிவயிறு தாங்கும் மகன்.

# தமிழ் - என் மனைவி

## முடியரசன்

வெள்ளி நிலா வினிலே—ஒரு
வெட்ட வெளி தனிலே
அள்ளி அணைத் தசுகம்—அதனால்
ஆவி சிலிர்த் ததடி !

நற்றிணை ஐங் குறுநூ—றகமும்
நல்ல குறுந் தொகையும்
உற்ற கலித் தொகையும்—தமிழே
ஊட்டி மகிழ வைத்தாய்.

வாழ்வு வளம் இழந்தாள்—வடக்கில்
வாடகை வீடுடையாள்;
சூழ்வினை ஒன் றுடையாள்—வலையில்
சொக்கிவிட் டேன் எனவோ

ஊடிப் புலந் துநின்றாய்—என்றன்
உள்ளம் அறிந் திலையோ ?
நாடித் திரி பவனோ—வஞ்சக
நங்கையின் கா தலுக்கே ?

மேலைத் திசை யுடையாள்—ஒருத்தி
மேன்மைக் குண முடையாள்;
வாலைக் கும ரியுடன்—நண்பாய்
வாய்மொழி பே சிடுவேன்.

நெஞ்சிற் கெடு தியில்லை—அவளால்
நேர்வது நன் மையடி.
வஞ்சிக் கொடி யிடையே—புலவி
வாட்டந் தவிர்ந் திடடி !

காலிற் சிலம் பொலிக்க—வருவாய்
காதல் மது பருகிக்
கோலப் பெரு வெளியில்—கவிவெறி
கொண்டு திரி வமடி.

சோலை வெளி யிடையே—நாம்
சுற்றித் திரி வமடி.
மாலை நிலா வரவே—தனியாய்
மாடந் தனை யடைவோம்.

அங்குநம் கூட் டுறவால்—பிறந்த
அன்புக் குழந் தைகளைச்
சங்கக் கவிதை என்றே—உலகம்
சாற்றிப் புக ழுமடி!

# வெற்றிப் பயணம்

## கே. சி. எஸ். அருணாசலம்

வழிநடக்க வருகவே! வளமைகொள்ள வருகவே!
பொழுதுபுலரும் வேளையாச்சு; போகவேணும் வருகவே!

கருமுகில்கள் கலைந்துபோகக் காறெழுந்து வீசுது;
கண்மயக்கும் இருள்விலக்க விண்ணில்வெண்மை காணுது;
தருணம்நல்ல தருணம்நல்ல பருவம்நல்ல பருவமாம்—
சமுத்திரங்கள் திரண்டெழுந்த தன்மைபோல வருகவே!

ஏர்பிடித்து நிலங்கிழித்து பாரதத்தைக் காப்பவர்
எழில்மணிக் கரங்கள்கொட்டி ஏறுபோல வருகவே!
பேர்படைத்த தமிழர்தாங்கள் முன்னெடுத்த பாதங்கள்
பின்னெடுத்து வைத்திடாத பெருமைபாடி வருகவே!

நாற்றுநட்டு நடவுசெய்து நாடுகாக்கும் நங்கைமீர்,
சேற்றினில் பதிந்தபாதம் திகழஇங்கு வருகவே!
ஆற்றினைத் தடுத்தணைகள் ஆக்குகின்ற தோழர்காள்,
அரும்புமேனி வேர்வைமின்ன அணிவகுத்து வருகவே!

அழுதாற்றும் ஏழைகண்ணில் வழிந்திடும் கண்ணீரிலே
அனற்பிழம்பொன் றேபிறந்திவ் வகிலமெங்கும் தாவுது!
தொழுதுகெஞ்சும் அடிமைவாழ்வின் துயரதுன்பம் யாவுமே
தொலைந்தொழிந்து போகுது! குலைந்துசாம்பல் ஆகுது!

உச்சிமீது வானும்மீனும் ஒடிந்துவீழ்ந்த போதிலும்—
அச்சமின்றித் தடைகள் யாவும் துச்சமென்று கிளம்புவோம்!
இச்சகத்தின் எழிலைஒயிலை எமதுகைகள் படைத்தன—
எமதுசொந்தம் நமதுசொந்தம் என்றுபாடி முழங்கிளேம்!

தொட்டதொட்ட இடங்களெங்கும் சுவர்க்கம்செய்யும் சிற்பிநாம்
சுரண்டலென்னும் பகைதொலைக்கத் தோள்குலுக்கி, உலகெனும்
பெட்டகத்தி லுள்ளசெல்வம் யாவும்நமது பேரிலே
பட்டயங்கள் செய்துபற்ற எட்டிவைக்கும் பயணமாம்!

புதியஉலகம் ஒன்றுதோன்றிப் பூவுங்கனியும் குலுங்கிடும்;
பூமிபச்சை மரகதம்போல் போர்வைபோர்த்து விளங்கிடும்!
விதியைமிதித்து ஏழைதனது வெற்றிக்கொடியை நாட்டுவான்—
விரிந்தமார்பில் இன்பமென்ற வெறிமிகுந்து வாழுவான்!

முயற்சிசெய்து மேலும்மேலும் முன்நடக்க ஆட்சியும்
முந்திவந்து கைகொடுக்கும் மோடிவித்தை செய்குவோம்.
வயிறும்பணமும் அடிமைசெய்ய மனிதனங்கு வாழலாம்.
வயிற்றுக்கடிமை யானமனிதன் மறைந்துபோகப் போகிறுன்!

சாதிசமயப் பூசலின்றித் தயைநிறைந்த இனிமையில்
சரித்திரத்தைப் புதுமைசெய்து சாந்திகொண்டு வாழுவோம்;
நீதியார்க்கும் ஒன்றுபோல நின்றுசேவை செய்திடும்.
நினைந்துபார்க்க நமதுநெஞ்சில் இன்பவெள்ளம் பெருகிடும்!

நாய்க்குமிங்கு சோற்றுப்பஞ்சம் இல்லையிந்த நாட்டிலே
நமக்குமட்டும் ஏன்எனுமோர் ஞாயங்கேட்க நாதியார்?
வாய்க்குவந்த வாறுபேசி வம்பளக்கும் வீணர்கள்
வலிமைகுன்றி வாயடைக்கத் தலைநிமிர்ந்து வருகுவீர்!

அங்கம்நோக உழைக்கும்மக்கள் ஆவிசோர்ந்து களைப்பதும்,
தங்கம்தோண்டி எடுக்கும்கைகள் தரித்திரத்தில் இளைப்பதும்,
பொங்கியோங்கும் நமதுநெஞ்சப் புதியசோதித் தீயதன்
கங்குபட்டுச் சாம்பலாகக் கண்சிவந்து கிளம்புவோம்!

இங்குஇன்று அந்தவுலகம் எழுந்திடக்கல் நாட்டுவோம்!
இன்னல்யாவும் தீரவேண்டி இதயசோதி மூட்டுவோம்!
சிங்கம்போலத் தலைநிமிர்ந்து திரண்டெழுந்து வருகுவீர்—
திருஉலாவும் நமதுதோளில் ஜெயமுலாவ வருகுவீர்!

# சிங்கநாதம் கேட்குது!

எஸ். டி. சுந்தரம்

சிங்கநாதம் கேட்குது!
சீனநாகம் ஓடுது!
சுதந்திரத்தின் சக்திவீர
சங்கநாதம் கேட்குது!
சீனன்வந்த போதிலும்
சிரமறுத்த போதிலும்,
சேனைகொண்டு செங்களத்தில்
சேர்ந்தெதிர்த்த போதிலும்... (சிங்)

ஈனமான அந்நியன்
இதயமீது தாக்கினான்.
ஊனமிக்க சீனனை
ஓட்டவேணும் உறுதியாய்!
கட்சியில்லை, பேதமில்லை,
கொள்கைநூறு தேவையில்லை—
கட்சியற்ற ஒற்றுமை
காணவேண்டும் நிச்சயம்! (சிங்)

பாரதத்தின் வாழ்விலே
புதியதிந்த சோதனை!
கோரமான சீனன்தந்த
கொடுமையான வேதனை!
வீரம்என்ற சக்தியின்
விடுதலைக்கு சோதனை!
சீறியே ஜெயிக்கவேணும்!
சத்தியத்தின் சாதனை! (சிங்)

ஆண்களற்ற பூமியா
அன்னைநமது இந்தியா ?
ஆண்மையற்ற சீனனின்
ஆணவத்தை வெல்லுவோம் !
பஞ்சசீலம் ஏட்டிலே ;
பழையநேசம் காற்றிலே—
பஞ்சையான மஞ்சள்சீனன்
பாய்கிறான்நம் நாட்டிலே ! (சிங்)

இமயவான மலையைஇன்று
இரத்தவான மாக்கினான்,
அமைதிகொண்ட ஆலயத்தை
அழிக்கவந்த பாதகன் !
புனிதகங்கை பிரம்மநதியில்
புலையன்காலை வைத்தனன்—
பொறுப்பதில்லை, போர்க்களத்தில்
பாய்ந்துவெற்றி நாட்டுவோம் ! (சிங்)

சரித்திரத்தில் ரத்தஏட்டைத்
தீட்டிவிட்ட சீனனே,
சீக்கிரத்தில் நீதிஉன்னைத்
தூக்கிலேற்றும் நிச்சயம் !
சாமதான பேததண்டம்
சமரிலே இறங்கினோம்—
சத்தியம் ஜெயிக்கும்என்ற
சங்கநாதம் கேட்குது ! (சிங்)

புத்தர்காந்தி வீட்டிலே
பூஜைசெய்யும் போதிலே
புகுந்தபூனை சீனமாம்
பேய்கள்அலறி வீழவே—
காலகால ஊழியில்
கலக்கமற்ற சூரியன்
ஞானபாரதத்தைச்சீன
நாகமென்ன செய்திடும் ? (சிங்)

# மயில்

## சுரதா

*அகவும் மயிலே! அகவும் மயிலே!*
*கால மறிந்து கருமுகில் மழைதர—*
*இளமணல் பரவிய எழில்மிகு காடெலாம்*
*முல்லை அரும்புகள் மெல்ல நகைக்கச்*
*சிவந்த பவளம் சிதறினாற் போன்று*
*தம்பலப் பூச்சிகள் தரைமீது தவழ,*
*கைவிரல் போன்ற காந்தள் அரும்பெலாம்*
*நிமிர்ந்துநின் றெரியும் நெருப்பென மலரக்*
*கருநிற வண்டுகள் காந்தாரம் பாடிட*
*ஆடிக் களிக்கும் அழகிய மயிலே!*

*உன்விழி நீலம்! உன்தோகை நீளம்!*
*உன்னுடல் மரகதம்! உச்சிக் கொண்டையோ,*
*கண்ணைக் கவர்ந்திடும் காயா மலர்கள்!*

*ஆடும் பறவைநின் அடிகள் இரண்டும்*
*ஈர நொச்சியின் இலைகளே யாகும்!*
*மழைக்குரல் நின்குரல்; மலையே நின்மனை;*
*செந்தமிழ் போன்று சிறந்த பறவைநீ!*

*அன்றுநீ மணிமலை அருகிலே நின்று,*
*மணித்தேர் அசைந்து வருமொலி கேட்டுக்*
*கழுத்தை உயர்த்தும் கலைமான் போன்று,*
*உன்றன் கழுத்தை ஓங்கி உயர்த்தியும்*
*அண்ணாந்த மலையை அண்ணாந்து நோக்கியும்*

இட்டசிற் றடியைநீ எடுத்தெடுத் தூன்றியும்
வண்ணத் தோகையை வட்டமாய் விரித்தே
'ஒ' வெனும் எழுத்தை உண்டாக்கிக் காட்டினை ;
கண்டேன் ! களித்தேன் ! மீண்டும் காண்கிறேன் !

நீட்டுயர் மேடையில் நாட்டிய மாடிக்
காட்டும் பறவையே, கலவை மயிலே,
தொங்கும் தோகையில் தொகைநிலை காண்கிறேன் ;
வண்ணத் தோகையில் வகைநிலை காண்கிறேன்;
விரிக்கும் தோகையில் விரிநிலை காண்கிறேன்

குறிஞ்சியே புணர்ச்சிக் குரிய திணையாம் ;
காதல் புரியவோ கார்காலம் சிறந்ததாம்
என்று தமிழர் இலக்கணம் வகுத்தனர்.
வகுத்த தமிழரின் வாழ்க்கை மாறினும்
மயிலேநின் வாழ்க்கை மாறவே இல்லை !

அணிலின் சிறுவா லதுபோல் விளங்கும்
செந்தினைக் கதிரைத் தின்னும் மயிலே,
நின்பகை, கோடை நெருப்பு வெயிலே ;
நீயெதிர் பார்ப்பது நீருண்ட முகிலே !

ஒரேஒரு கேள்வி உனைநான் கேட்கிறேன் ;
ஆடுங் கலாபமே, அருகில்வா ; இதைக்கேள் !
கருவுற்ற முகிலைக் கண்டதும் நீயோ
ஆடு கின்றனை ; அதுசரி, தோகையால்
ஈர முகிலினை ஏன்விசிறு கின்றனை ?

சுரந்திடும் ஊற்றுநீர் சுடுமென் றெண்ணி
விசிறுவார் உண்டோ ஓலை விசிறியால் ?

அஃறிணை மயிலே, ஆராய்ந்து பார்த்துச்
செய்வதைச் செய்தால் சிரிப்புக் கிடமிலை
என்பதை அறிக ; என்மனங் கவர்ந்த
நாட்டியப் பறவையே நன்குநீ
ஆட்டுக தோகையை, ஆடுக நீயே !

# தாமரையின் தவம்

## சோமு

பாசி படர்ந்ததோர் பொய்கையிலே—வானம்
படிந்த நீலக் குமைவினிலே
வாசி பயின்றவர் யோகியர்போல்—ஒரு
வண்ணமலர் நின்று தவம்செய்யும்.

சேற்றில் பிறவி எடுத்துவந்தாள்—ஒரு
செம்மலர் வித்தில் பிறந்துவந்தாள்;
ஏற்ற கணவனை எய்துதற்கே—அவள்
எத்தனை யோதவம் இயற்றிவந்தாள்.

ஊசி முனையில் நோன்பிருந்தாள்—நிதம்
உதய வானை நோக்கிநின்றாள்;
வீசிப் படரும் அலைகளிலே—அவள்
விண்ணிற் கரங்கள் கூப்பிநின்றாள்.

இமைகள் மூடினள், இதழ்குவித்தாள்—அவள்
இதயப் பனிகள் துளித்துநின்றாள்;
குமையும் இதய மணமெல்லாம்—மலர்க்
கூட்டினுள் விம்மிடக் குலுங்கிநின்றாள்.

மொட்டில் உணர்வு மூடிநின்றாள்—மன
மூச்சை அடக்கி ஒடுக்கிநின்றாள்;
பட்டில் பரந்த பச்சிலைமேல்—அவள்
பாரை மறந்துவிண் பார்த்திருந்தாள்.

ஞான நிலையில் முனிவோர்கள்—இந்த
ஞாலம் கடந்த நிலையினிலே
மோன ஒருமையில் நிற்பதுபோல்—அவள்
மோகத் தவத்தில் முனைந்துநின்றாள்.

காலமெனும் பொய்கைக் கரும்புனலில்—மனக்
கன்னி எனும்பூம் பாவைஅவள்;
கோலமிகும் ஒளிக் கோமகற்கே—உடற்
கூட்டினிலே நிதம் நோன்பிருந்தாள்.

விடிவு காலம் வந்ததடி—பொழுது
விடியுங் காலம் வந்ததடி.
முடிந்த இருளின் திரைவிலகி—வான்
முகத்தில் பொன்னொளி பூத்ததடி!

செங்கதிர்ச் செல்வனின் பொன்னொளியில்—அந்தச்
செம்மலர் பொன்மலர் ஆனதம்மா.
தங்கக் கதிரவன் பொற்கரமும்—செய்ய
தாமரை தொட்டுச் சிவந்ததம்மா!

# ஒற்றையடிப் பாதை

சி. ரகுநாதன்

மொட்டைப் பனைமரங்கள்
    மோனத் தவமியற்றும்
வெட்டவெளி வெம்பரப்பு;
    வெம்பரப்பின் எல்லையிலோ
தொட்டுத் தடவிநிற்கும்
    தொடுவானம்; தொலைவெல்லாம்
சுட்டுப் பொசுக்குமொரு
    சுடுகாடே! இத்தகைய
பொட்டல் களர்நிலத்துப்
    புழுதிப் பொடியூடே
ஒட்டைச் சாணகலத்து
    ஒற்றையடிச் சிறுபாதை...

பாதையதை யான்நோக்கிப்
    பகர்ந்தேன் ஒருகேள்வி:
"பேதாய், இப் பாலைவெளிப்
    பேய்த்தேரின் வெம்மையிலே
ஆதரவு ஏதுமின்றி
    அலைக்கழிந்து நீவாழ்தல்
வேதனையோ? சோதனையோ?
    விரதங்கள் உண்டுகொலோ?
ஏதாம்உன் தவக்கோலம்?"
    என்றிட்டேன், என்றவுடன்
பாதையது வாய்திறந்து
    பணிவோடு பேசிற்று...

“வெஞ்சுரம்தான் என்றாலும்
விடாய்தணிக்க நீர்தேடி
வஞ்சியர்கள் குடமெடுத்து
வாவித் தடம்நாடி,
மஞ்சள் வெயில்மயங்க
வரும்சமயம் அன்னவர்தம்
கஞ்சமலர்ச் சேவடியைக்
கையேந்திக் கண்ணொற்றி
நெஞ்சகத்தி லேபதித்து
நினைவு மறந்திருக்கும்
கொஞ்சப் பொழுதுக்காய்க்
கோடியுகம் காத்திருப்பேன்!”

# நெய்வேலி

## தமிழ் ஒளி

*அரிய நிலக்கரியே. ஆசையே. முன்னாட்*
*பெரிய மரங்கள் பெயர்ந்துவீழ்ந் துட்புதைய*
*மண்ணுள், அதன்வயிற்றுள் மாயமாய்த் தோன்றியநீ;*
*எண்ணுள் அடங்கா இடங்கொண்டு கண்துயின்று*
*பன்னாள் உறைந்து படிவங்கள் ஆயினாய்.*
*முன்னாள் அறிய முதல்தந்தாய் இன்றைக்கே.*
*மண்ணுள் மறைந்த மனிதன் அலாவுதீன்,*
*கண்ணுள் ஒளிகாட்டிக் கையில் விளக்கேற்றி,*
*நெய்வேலி மண்ணில் நிலக்கரியாய் நிற்கின்றான்!*
*மைவான் முகில்போன்றும் மாயப் பசுபோன்றும்*
*கற்பகம் போன்றும் கருதியவை நல்கவே*
*முற்பட்டான் பாரீர், முகிழ்க்கும் நிலக்கரியாய்!*
*மூங்கிற் பெருங்காடு முன்னங் குழல்தந்து,*
*வீங்கி வளர்ந்து, விழுந்து, விறகாகி*
*அழுந்தி அடிமண்ணுள் அங்கே கிடந்து*
*பழுப்பு நிலக்கரியாய்ப் பாய்ந்தெழுந்த விந்தைதனைத்*
*தென்னாடு கண்டு சிலிர்ப்பெய்த—ஆம், இன்று*
*பொன்னான நேரம், புதுநாள் பிறந்துளது!*
*பச்சைப் பயிர்விளையப் பக்குவம் ஆனஉரம்*
*இச்சைபோல் எங்கும் இயற்றுவதும், மின்விசையை*
*ஆக்கி எமக்கே அளிப்பதும், பேரிருள்*
*போக்கி ஒளியைப் பொழிவதும் செய்யவல்லாய்!*
*ஊர்திகளும் கப்பலும், உற்பத்தி ஆலைகளும்*
*பேர்பெற் றியங்கப் பெரிதும் பயன்நல்கும்*
*எங்கள் நிலக்கரியே! ஏழை மடிதவழ்ந்த*
*தங்கக் குழந்தாய்! தமிழ்நாட்டுத் தாய்வளமே!*

பொன்னுல் மணியால் புகழ்முத்தால் என்னபயன்?
உன்னுல் புகழ்பெற்ரும்—ஓ!ஓ! உலகிடையே!
நாட்டின் இளைஞர்காள்! நல்ல இலக்கியங்கள்
தீட்டும் அறிஞர்காள்! தென்னக மைந்தர்காள்!
கூனல் விழுந்து குமைகின்ற நம்நாடு
வானம் வரைவளர்ந்து வான்மதியைத் தன்முடியில்
சூடி மகிழத் துணைசெய்யும் நெய்வேலி—
பாடி நடப்பீர் பறவை இனம்போலே!
நாட்டின் எதிர்காலம் நமைப்புகழத் தென்ருறு
காட்டின் பெயர்விளங்கக் கல்வி, கலைவளர
ஈன வறுமை இருள்அகல எவ்விடத்தும்
ஞானச் சுடர்விளைய நன்னும் இடர்களைய,
"உழைப்பால் நம்நாட்டை உயர்த்தலாம்" என்றே
அழைப்பிதழ் நீட்டி அழைத்ததுகாண் நெய்வேலி!
காடு கரம்புகள் காணுக் கனவெய்தி
நாடு நகர்களாய் நாட்காலை மாற்றமுற
வாழ்வை உவந்தளிக்கும் வையப் பெருநிதியே,
தாழ்வு தொலைக்கும் தனிச்சுடரே, வாழியநீ!

# பிழை திருத்தம்

## ஆனந்தம்

அப்பாவின் கைப்பாவை குப்பு சாமி
அழகான கோமதிக்குத் தாலி கட்டித்
தப்பாமல் முப்பதுபொன் தந்தா லன்றித்
தன்னகத்துக் கன்னவளை அழைத்துக் கொள்ள
ஒப்பாது மனமென்று மாம னூர்க்கே
உரைத்துவிட்டான்; ஊர்திரும்பி ஊமை யானன்.
எப்போதும் மற்றவரை ஏற்றி விட்டே
இருந்தஇடம் பெயராத ஏணி போன்ற

ஆரம்ப ஆசிரியர் பெற்றெ டுத்த
ஆரும்பெண் கோமதிதான் என்ன செய்வாள்?
கூரம்பு நெஞ்சினிலே பாய்ந்த தைப்போல்
கொடுமைமிகு நிபந்தனையால் குமைந்து போனாள்.
"ஊர்வம்பு பேசுவதைத் தாங்க மாட்டேன்,
உயிர்சிறிது; மானந்தான் பெரிதாம்; என்பால்
பேரன்பு சுரந்திடுவீர்! பெருமை சேரப்
பெரியமனங் கொண்டென்னை உரிமை செய்வீர்!"

என்றெழுதிக் கண்ணீரில் ஊற வைத்த
எத்தனையோ கடிதங்கள் அனுப்பிப் பார்த்தாள்.
ஒன்றிலுமே பயனில்லை; ஓய்ந்து போனாள்!
உடன்பிறந்தாள் துயர்கேட்ட மூத்த மங்கை
சென்றவளைத் தன்வீட்டிற் கிட்டு வந்து
சிறியவொரு தனியறையில் இருக்கச் செய்தே,
அன்றிரவே கணவனையும் அனுப்பி, அந்த
அப்பாவி மணமகனை அழைத்து வந்து—

சிறப்பான விருந்தெல்லாம் நடத்தி வைத்துச்
சிலநாளே கணவனுடன் அப்பாற் சென்ருள்.
முறைப்பான மாப்பிள்ளை மூன்றும் நாளே
முரடான தந்தைக்கு முடங்கல் தீட்டி,
"அறப்பாதை தவறிநின்றேன் இதுநாள் காறும்;
அப்பாசொல் முதன்முறையாய் மீறி, இந்தப்
பிறப்பாலே உண்டான பயனைக் கண்டேன்!
பிழைதிருந்தி வருகின்ருேம் இன்றே" என்ருன்.

# வேளை வரவில்லை

## கண்ணதாசன்

எந்த ஊர் என்றவனே,
இருந்த ஊரைச் சொல்லவா?
அந்த ஊர் நீயும்கூட
அறிந்த ஊர் அல்லவா!

உடலூரில் வாழ்ந் திருந்தேன்;
உறவூரில் கலந் திருந்தேன்;
கருவூரில் குடி புகுந்தேன்.
மண்ணூரில் விழுந்து விட்டேன்!

கண்ணூரில் வளர்ந் திருந்தேன்:
கையூரில் தவழ்ந் திருந்தேன்;
காலூரில் நடந்து வந்தேன்.
காளையூர் வந்து விட்டேன்!

வேலூரைப் பார்த்து விட்டேன்;
விழியூரில் கலந்து விட்டேன்;
பாலூறும் பருவ மென்னும்
பட்டினத்தில் குடி புகுந்தேன்!

காதலூர் காட்டி யவள்
காட்டூரில் விட்டு விட்டாள்;
கன்னியூர் மறந்த வுடன்
கடலூரில் விழுந்து விட்டேன்!

பள்ளத்தூர் தன்னில் என்னைப்
பரிதவிக்க விட்டு விட்டு,
மேட்டூரில் அந்த மங்கை
மேலேறி நின்று கொண்டாள்!

கீழுரில் வாழ்வ தற்கும்
கிளி மொழியாள் இல்லையடா.
மேலூரு போவ தற்கும்
வேளை வர வில்லையடா!

# வாயில் திறக்கட்டும்

## குலோத்துங்கன்

கால முற்றினும் தாழ்திற வாதளம்
 கதவு தட்டுதல் யாரெனக் கேட்கிறாய்.
ஞால மென்றுரை கோள்தனில் வாழுநர்;
 நாளு முன்னெழில் நாடி நடந்தவர்
தூல மெய்யுடல் மண்ணிடை நிற்பினும்
 தொலையும் நாளும் கடந்தெழு சிந்தையர்
நீல வெண்வெளி நீந்தி யதன்கரை
 நீங்கி மேற்செலும் மாந்தர்யாம், தேவியே!

அடைவ தற்கிய லாதஎன் கோட்டையின்
 அரண்க டந்தவர் யாரெனக் கேட்கிறாய்.
இடையி றந்துனைத் தேடுமெம் யாத்திரை
 இன்று நேற்றுத் துவங்கிய தன்றுகாண்.
தடைநி றைந்துநீள் சாலைபல் கோடியில்
 தடவி ஊர்ந்து தவழ்ந்தவர்; பேரருள்
படைக டந்தவர்; வேண்டிய யாவையும்
 படைக்க முந்திடும் மாந்தர்யாம், தேவியே!

இயற்கை யன்னைநீ ஈன்றவ ளில்லையோ?
 எம்மி டத்தும் ஒளிப்பது நீதமோ?
முயற்சி கொஞ்சமோ; கோப்பைநஞ் சுண்டதும்,
 முழங்கு தீயிடை வெந்ததும், சேயுடன்
கயற்கண் அன்பினள் காதல் துறந்ததும்,
 காடு சென்று கடுந்தவம் நோற்றதும்,
செயற்ப டுந்துறை வெஞ்சிறை சேர்ந்ததும்,
 சிலுவை கண்டதும் எம்மினம், தேவியே!

அறிவி யற்கலை யாவும் படைத்ததும்,
அயர்தல் உண்ணல் மறந்தங் குழைத்ததும்,
பொறியி யற்கலை ஊர்தி சமைத்ததும்,
புறங்கள் ஊடறுத் தெங்கும் பறந்திடும்
நெறிமு யன்றதும், ஒன்றுபின் ஒன்றென
நிறைந்த பல்திரை நீக்கிமுன் னேறிடும்
வெறியி லின்பம் விழைந்ததும் எம்மினம்;
வீட்டின் வாயில் திறக்கட்டும், தேவியே!

# காலைக் கன்னி

## தமிழழகன்

கங்குல் இருளின்
கதவைத் திறந்தொரு
கன்னி யெழுந்தாச்சு—காலைப்
பொன்னி வளர்ந்தாச்சு.

மங்குலில் வைகறை
மாமலை தோறும்நீர்
மஞ்சள் தெளிச்சாச்சு— வர்ணம்
கொஞ்சிக் கொழிச்சாச்சு

கூடமும் வாசலும்
கோலம் இழைத்திடக்
கோமளம் பூத்தாச்சு—பன்னீர்ப்
பூமணம் கோத்தாச்சு.

ஆடலும் பாடலும்
ஆயிரம்! ஆயிரம்!
ஆனந்தம் உண்டாச்சு—கலை
தானெங்கும் கண்டாச்சு.

முல்லையும் கொல்லையும்
முன்னிள வெய்யில்
முழுக விழிச்சாச்சு— சுடர்
ஒழுகக் குளிச்சாச்சு.

வல்லிருள் நீங்கமுன்
வார்த்தகண் ணீரோ
வயிரப் பணியாச்சு—பின்நெற்
பயிரில் மணியாச்சு.

பொங்கர் மதுகரம்
பொன்னரும் பூதவும்
பூங்குயில் கேட்டாச்சு—அதோ
மாங்குயில் பாட்டாச்சு.

மங்கலக் காலை
மணமகள் வையய
மணவறை போந்தாச்சு—காலக்
கணவரைச் சார்ந்தாச்சு.

# எல்லை விரிகிறது

## சாலை இளந்திரையன்

மானுட வாழ்க்கையின்
எல்லைப் பரப்பு
வளர்ந்து விரிகிற து—முன்பு
வைத்த வெளிப்புற
மண்சுவர் வேலி
மடிந்து சரிகிற து!
கூனுடை யோன்விழி
கொண்டு கணித்த
குறிப்பு முடிகிற து—புதுக்
கொள்கை உதிக்கவே
கோள்களில் பார்வையின்
கூர்மை படிகிறது.

நான்கு சுவருக்குள்
இல்லறம் வைத்தவன்
நான்முழ மானுட வன்—அந்த
நண்டுக் குடிசையில்
தன்னை முடக்குவ
னோ,புது மானுட வன்?
ஏங்கிக் கிடந்து
கிடந்து சுருண்டவன்
ஏகிய மானுட வன்—அவை
யாவும் அடைந்து
நிமிர்ந்து வளர்ந்திடு
வான்,புது மானுட வன்!

வள்ளுவத் தந்தையும்
சேகப் பிரியரும்
    வாழுவர் மூசியத் தே — புது
வாழ்க்கை நடைமுறை
பாடுவர் பற்பலர்,
    வந்தவர் ஆசிபெற் றே!
அள்ளஅள் ளக்குறை
யாத சுவைதரும்
    ஆட்களின் நாட்களி னி— வெ
ஆச்சரி யக்குறி
பேச்சளக் கும்வெறி
    அற்றதே, வாழ்க்கைஇ னி...

# இந்த நாள் நிலைமை

## பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

ஏரெப் புடிச்சவனும்
இங்கிலீசு படிச்சவனும்
ஏழை பணக்காரன் இப்ப
ஒண்ணுங்க— நாம்
எல்லாரும் சமத்துவமென்று
எண்ணுங்க !

கோவில்கட்டி வச்சவனை,
குளம்வெட்டித் தந்தவனைக்
கூலியின்னு கேலிசெஞ்சது
அந்தநாள்—தொழி
லாளியை மதிக்கிறது
இந்தநாள் !

காலைமுதல் மாலைவரை
கைகடுக்க வேலைசெஞ்சு
கஞ்சிக்குத் திண்டாடியது
அந்தநாள்—துணிஞ்சு
பஞ்சப்படி கேக்கிறது
இந்தநாள்!

உள்ளநேரம் டூட்டிக்குமேல்
ஒருநிமிஷம் ஆச்சுண்ணாலும்
ஓவர்டயம் கொடுக்கச்சொல்லி
ஆடரு—இந்த
உளவுநல்லாத் தெரிஞ்சவரு
லீடரு !

ஆதாயம் லாபமெல்லாம்
அவுங்களே எடுத்துக்கிட்டு
ஏதாச்சும் தந்தா உண்டு
சான்சு—இப்ப
எண்ணிஎண்ணி வைக்கவேணும்
போனசு!

ஏழை எளியவனை
வாழவைக்க வேணுமின்னு
இந்தியா கவர்ன்மெண்டு
சொல்லுது—இதை
எல்லோரும் கடைப்பிடிச்சா
நல்லது!

# கட்டாரி நீட்டுகின்ருர்!

## முருகுசுந்தரம்

ஏதென்சு நாட்டவரே! குன்றெடுத்த
எர்குலிசின் பரம்பரையே! அத்து மீறிக்
காதலித்துக் கரையோரம் ஆயிரம் போர்க்
கப்பல்களை வரவழைத்த அழகுப் பூசல்
மாதரசி ஹெலனுக்குப் பின்பிறந்த
மறவர்களே! இறவாமல் இனிக்கும் காதற்
காதைக்குள் கவிதைக்குள் வாழும் ஹோமர்
கால்வழியில் வந்தவரே! கிரேக்க மக்காள்!

எழுத்துக்கள் அணிவகுக்கும் வாக்கியத்தின்
எல்லையிலே நிற்கும்வினக் குறியைப் போலக்
கிழத்தன்மை யால்முதுகு வளைந்து விட்டேன்;
கேள்வியினல் இந்நாட்டு மடத்தனத்தை
முழம்போட்டுப் பார்ப்பதுதான் எனக்கு வேலை!
முட்டாளை மூக்கறுத்தேன் என்பதல்லால்
பிழையென்ன செய்துவிட்டேன் நாட்டில்? இந்தப்
பேரவையில் அமர்ந்திருப்போர் சிந்திக்கட்டும்!

நாத்திகனும்; நல்லிளைஞர் பிஞ்சு நெஞ்சை
நஞ்சாக்கி விட்டேனும்; அவருள்ளத்தில்
காத்திருந்து கன்னக்கோல் வைக்கின் றேனும்;
கதைக்கின்ருர், நானென்ன கன்னிப் பெண்ணு?
பாத்தியிலே தலைநீட்டும் களைகள், நல்ல
பயிர்ச்செடியை அழிப்பதற்கு நிற்பதைப்போல்
காத்திருக்கின் ருர்என்னை அழிப்பதற்கு;
கட்டாரி நீட்டுகின்ருர் முதுகுப் பக்கம்!

ஆயிரமாய் விண்மீன்கள் பூக்கும்; வானில்
அந்திநிலா என்னைப்போல் ஒன்றே பூக்கும்!
தாய்வயிற்றைக் கீறிவரும் நண்டுக் கூட்டம்
தரையின்மேல் பலகோடி; ஆனால் அஞ்சப்
பாய்ந்துவரும் சிங்கங்கள் நாட்டில் உள்ள
பகுத்தறிவு வாதிகள்போல் ஒன்றி ரண்டே!
ஓய்வின்றி நான்நடத்தும் நாக்குச் சண்டை
உங்களுக்குள் ஒருசிலரின் சார்பா கத்தான்!

நூறுமுறை சாவதற்குத் தண்டித்தாலும்
நும்முள்ளம் இணையின்று மன்னித் தாலும்
வேறுதொழில் நான்செய்யப் போவ தில்லை!
வேங்கையைப்போய் வரிக்கோட்டை மாற்றிக் கொள்ளக்
கூறுகின்றீர், நடைபெறுமா? உயிரின் மேலாம்
கொள்கையினை நான்துறக்க மாட்டேன்; பாயும்
ஆறுகளும் திசைமாறும்; ஆனால் இந்த
அறிஞனென்றும் திசைமாறப் போவ தில்லை!

கொல்லவந்த நல்லவரே! உங்கட் கொன்று
கூறுகிறேன்; வல்லவர்கள் சாகும் போது
சொல்லுகின்ற சொல்லுக்கு வலிமை யுண்டு;
சுழற்காற்று கட்டாயம் மாறி வீசும்.
கல்லெடுத்து வீசுகிறீர்; எதிர்கா லத்தில்
கட்டாயம் உம்மீது மலையே வீழும்.
நில்லென்று நீர்க்குளத்தில் தள்ளு கின்றீர்;
நெருப்பாற்றில் நீர்மூழ்க வேண்டி நேரும்!

இறுதியிலே நானொன்று வேண்டு கின்றேன்.
என்மக்கள் வளர்ந்துவரும் எதிர்கா லத்தில்
முறைதவறி நடந்தாலோ, பண்ணை விற்று
முதல்சேர்க்க முனைந்தாலோ, உண்மை யென்னும்
நெறிநிற்க மறுத்தாலோ, சிந்திக் காமல்
நெடுமரமாய் நின்றாலோ, உலகோர் முன்னால்
அறிஞரைப்போல் நடித்தாலோ, இரக்க மின்றி
அவர்களையும் நஞ்சூட்டிக் கொல்ல வேண்டும்!

# பரிசளிப்பு

### மின்னூர் சீனிவாசன்

*வானவில்லை நெய்தவர்க்குப்*
*பரிசளிக்க வந்துள்ளேன்—*
*யாரங்கே, யாருமில்லையா?*
*கானமயில் தோகைசெய்த*
*கலைஞர்க்குப் பரிசளிப்பேன்—*
*யாரங்கே, யாருமில்லையா?*

*ஒளிதந்து நிழல்தந்த*
*ஓவியர்க்குப் பரிசளிப்பேன்—*
*யாரங்கே, யாருமில்லையா?*
*வெளிதந்து காற்றளித்த*
*வித்தகர்க்குப் பரிசளிப்பேன்—*
*யாரங்கே, யாருமில்லையா?*

*மாலைவெயிற் கோலமிட்டு*
*மதிவிளக்கை ஏற்றியதார்—*
*யாரங்கே, யாருமில்லையா?*
*சோலைமலர் சொரிந்துதென்றல்*
*சுழலவிட்ட தாரங்கே—*
*யாரங்கே, யாருமில்லையா?*

*நீலவிண்ணும் திரையிட்டு*
*நிலமகளின் எழில்காப்பார்—*
*யாரங்கே, யாருமில்லையா?*
*காலமெல்லாம் கண்ணுறங்காக்*
*கடற்கவிக்குப் பரிசளிப்பேன்—*
*யாரங்கே, யாருமில்லையா?*

செங்கதிரைப் பந்தாடும்
சிறுவன்யார் ? நாள்தோறும்
தேடுகிறேன் பரிசளிக்க!
எங்கும்ஒலி உலவவிட்ட
இசைவாணன் யாரங்கே ?
யாரங்கே, யாருமில்லையா ?

புவியினிலே மனமென்னும்
புதையலினைத் தந்தவர்க்குப்
பரிசளிக்கப் போகின்றேன்—
கவிதையாம் கனவுதந்த
கலைஞனுக்குப் பரிசளிப்பேன்—
யாரங்கே, யாருமில்லையா ?

# வாத்தியாரு வேலை

## சிற்பி

மணியடிச்சாப் பணிதுவங்கும் வாத்தியாரு வேலை;
மலிவுப்பதிப்பா ஆகிப்போச்சு வாத்தியாரு வேலை!

அந்தநாளில் ஆசானென்றால் அரசரும் பணிவாராம்;
அறிவின்சேம நிதியமென்று கைகள் கூப்புவாராம்;
நைந்துபோன பழையகதை; சொன்னால்வரும் கோபம்.
நாட்டிலெவர்க்கும் இளைத்தஆண்டி வாத்தியாரு பாவம்!

படிக்கும்போது வணக்கம்போட்டுப் பல்லிளித்து நிற்பான்;
பட்டதாரி ஆனவுடன் மாணவனே முறைப்பான்.
பொடிப்பயலாய் நினைத்திருப்பார் ஆசிரியர்; பாடப் ,
புத்தகத்தில் காதல்கதை படித்திருப்பான் சீடன்!

முணுமுணுத்துச் சுழித்துவைக்கும் கணக்குவாத்தி யாரு;
மூளையெல்லாம் கலங்கவைக்கும் சயன்சுவாத்தி யாரு;
மணிக்கணக்காய்க் கதையளக்கும் தமிழ்வாத்தி யாரு;
வளவளவென் றிழுத்தடிக்கும் இங்லீஷ்வாத்தி யாரு;

எல்லாருக்கும் பேருவைப்பார் மாணவப் பெரியாரு.
ஏமாந்துட்டா கரும்பலகை கார்டூனும் வரைவாரு!
சொல்லப்போனா பொருள்வளத்தில் வாத்தியார்பாடு தாளம்;
சுமக்கமட்டும் பொறுப்பளிக்கத் தலைவர்கள்ஏ ராளம்!

வந்துபோகும் மந்திரிமார் வாய்மணக்கும் பேச்சில்
வாத்தியாரின் தொண்டுபற்றி மேடைதோறும் கூச்சல்!
சந்தனமென் றெழுதிவிட்டால் கைமணப்ப தில்லை;
சாகுமட்டும் ஆசிரியன் வாழ்க்கை பெருந்தொல்லை!

கூலிஉயர்வு கேட்பதுதான் தொழிலாளியின் வேதம்;
குறையுரைத்தால் வாத்தியாரின் வாழ்க்கை சோககீதம்!
நாலுபக்கம் சுவரிருக்கும் பள்ளிக்கூட ஓலம்;
நடுவிருக்கும் சந்தையிலே வாத்தியாரு ஏலம்!

பெரியமனிதர் மத்தியிலே வாத்தியாரு வந்தால்
பிச்சைக்காரன் என்பதுபோல் ஏளனமாய்ப் பார்வை.
தெரியலேயா, தீபாவளி போனஸ்இவருக் கேது?
திருமணமார்க் கட்டில்இவரைப் பெண்களும் மதிக்காது!

எடுத்துச்சொன்ன வெட்கம்வாத்தி யாரில்ஏழு பிரிவு;
இவரைவிட அவர்உயர்வாம், மேடுபள்ளம் சரிவு!
தடுக்கிவிழும் சிலராலே விளையும்அலங் கோலம்;
தமக்குள்ளேயே சண்டையிட்டால் வாழ்வதெந்தக் காலம்?

மார்க்குப்போடும் சீசனிலே ஏதோகொஞ்சம் கிராக்கி;
மற்றநாளில் இவருவெத்து வேட்டெழும்துப் பாக்கி!
சேர்க்கைகெட்ட தலைவருக்கும் உலகம்அன்பைப் பொழியும்;
சின்னத்தவறு பண்ணினாலும் இவருசீட்டுக் கிழியும்!

'சொல்வதுயார், வாத்தியாரா? தூரத்தள்ளு குப்பை!
தொணதொணப்ப திவரியற்கை; சாரமற்ற சக்கை!'
எல்லாருக்கும் ஆசிரியன் எட்டிஉதைக்கும் பந்து;
எந்திரமாய் ஆகிவிட்டார் இதயம்நொந்து நொந்து!

ஏழைவாத்தி யார்புராணம் இன்னும்சொன்னால் விரியும்.
எடுத்துரைத்தால் எவரெவரோ வயிறுபற்றி எரியும்!
வாழவேண்டும் ஆசிரியன் மனிதனன்றோ கூறு!
மறைப்பானேன், நானுமிங்கோர் ஏழைவாத்தி யாரு!

மணியடிச்சாப் பணிதுவங்கும் வாத்தியாரு வேலை;
மலிவுப்பதிப்பா ஆகிப்போச்சு வாத்தியாரு வேலை!

# வ. வே. சு. ஐயர்

## அப்துல் ரகுமான்

படுக்கவைக்கப் பட்டிருந்த நாடு—பகையின்
படையுடைத்துக் கொண்டிருந்த காலம்
மடக்கிவைக்கப் பட்டிருந்த வீரம்—பொங்கி
மடைவுடைத்துக் கொண்டிருந்த நேரம்
அடக்கிவைக்கப் பட்டிருந்த தேசம்—அடைத்த
கடைவுடைத்துக் கொண்டிருந்த வேளை
தடுத்து வைக்கப்பட்டிருந்த மக்கள்—அடிமைத்
தடைவுடைத்துக் கொண்டிருந்த நாட்கள்...

உடலெல்லாம் துடிக்கின்ற போது—அதிலே
ஓரங்கம் தூங்குவது முண்டோ?
தடைவிலங்கு பாரதத்துக் கென்றால்—அதனைத்
தமிழகந்தான் தாங்குவது முண்டோ?
விடுதலைப்போர்ப் படைதிரட்டி முன்னால் — நின்று
வீரவுரை தந்ததலை வர்க்குள்
சுடுநெருப்பாய் மூண்டெழுந்த ஐயர் — அந்தச்
சுடர்விளக்கின் புகழ்பாட வந்தேன்...

சட்டப் படிப்பிட்ட பட்டப் பிடிப்புக்குள்
கட்டுப்படக் குனியேன்—மானம்
வெட்டுப்படத் துணியேன்—பிறர்...
துட்டப் பிடிப்பினில் கட்டப்படுந் தாயின்
துயரை ஒழிப்பேன் என்றார் — தமது
உயிரை அளிப்பேன் என்றார்!

ஊரையே மாற்றியும் பேரையே மாற்றியும்
ஊரைஏ மாற்றியவர் — பல
பேரைஏ மாற்றியவர் — இந்தப்

பாரினில் உண்டு ;தன் நாட்டினைக் காத்திடப்
பற்பல வேடமிட்டார்—இவர்போல்
விற்பனர் வேறிங்குயார் ?

“நீர்வீழ்ச்சி தனிலன்று நீர்வீழ்ச்சி
உற்றாலும் நின்றகீர்த்தி
சீர்வீழ்ச்சி உற்றதில்லை ; பேர்வீழ்ச்சி
உற்றதில்லை ; சிதைந்தேஇந்தப்
பார்வீழ்ச்சி உற்றாலும் பாரதத்து
மக்கள்தம் மனத்திருந்து
நீர்வீழ்ச்சி உறுவதில்லை” எனப்புகழ
வரலாற்றில் நிலைத்துநின்றார் !

# வேலை இருக்கிறது நிரம்ப...

மீ. இராசேந்திரன்

வேலை இருக்கிறது நிரம்ப—என்னை
வேகப் படுத்திவிடு தாயே—பசுஞ்
சோலை மரத்தின்குளிர் நிழலில்—மனஞ்
சொக்கவைக் கும்பூ நகையில்—அந்தி
மாலை மதியமுத எழிலில்—நான்
மயங்கிக் கிடந்தேனே நாளும்—ஆ!
வேலை இருக்கிறது நிரம்ப—என்னை
வேகப் படுத்திவிடு தாயே!

பள்ளிக்குப் போய்வந்த நாளில்—சின்னப்
பட்டங்கள் விட்டுவிளை யாடிப்—பல
வெள்ளித் திரையில்மினு மினுக்கும்—சில
வேட மயமுகங்கள் கண்டு—நான்
துள்ளித் திரிந்தேனே யல்லால்—என்ன
தூய பணிசெய்தேன் தாயே—என்றன்
உள்ளந் தனிக்கனல் மூட்டி—என்னை
ஊருக் குழைத்திடச் செய்வாய்!

காளைப் பருவத்தில் எல்லாம்—சுகக்
கன்னிக் கனவினில் மூழ்கித்—தினம்
வேளை தவறாமல் உண்டு—திண்ணை
வீழ்ந்து துயில்கொண்ட தல்லால்—இரு
தோளைத் திரண்டமலை யாக்கி—நான்
தொண்டு புரிந்ததுவும் இல்லை—இனி
நாளை உலகத்திற் கேனும்—என்னால்
நன்மை விளைந்திடச் செய்வாய்!

மேடை பலப்பல ஏறிக்—கரு
மீசை முறுக்கியே நின்று—நித்தம்
கோடை இடியாய் முழங்கி—ஒரு
கூட்டம் தனைச்சேர்த்த தல்லால்—சிறு
கூடை முடைந்ததும் இல்லை—உனைக்
கும்பிட்டுக் கேட்கிறேன் தாயே—நான்
பாடையில் ஏறிடும் முன்னர்—ஒன்றைப்
படைத்த பெருமை அளிப்பாய்!

அற்பக் கதைகள் படித்து—மன
தாரக் குடித்துக் களித்து—உடல்
விற்கும் வனிதையர் நிற்கும்—நெடு
வீதி இருட்டில் ஒதுங்கி—உயிர்க்
கற்பை இழந்தது மல்லால்—நல்ல
காரியம் என்னநான் செய்தேன்—நவ
சிற்பி இவனென என்னை—வையம்
செப்பிடச் செய்திடு வாயே!

மலையை உடைத்திட வேண்டும்—மின்னும்
மணியை எடுத்திட வேண்டும்—கடல்
அலையில் குதித்திட வேண்டும்—முத்தை
அள்ளிக் கொணர்ந்திட வேண்டும்—காட்டு
நிலத்தை உழுதிட வேண்டும்—செந்
நெற்சுவை கண்டிட வேண்டும்—நான்
கலையிற் சிறந்திட வேண்டும்—கோடிக்
கவிதை படைத்திட வேண்டும்!

வேலை இருக்கிறது நிரம்ப—என்னை
வேகப் படுத்திவிடு தாயே—கொடும்
பாலை வனத்தினைப் போலே—நான்
பாழ்பட் டிருந்தது போதும்—வீரப்
பாலைக் கொடுத்திடு வாயே—வெற்றிப்
பாக்கியம் நீதரு வாயே—அதி
காலைக் கதிரவன் போலே—முகங்
காட்ட அருள்புரி தாயே!

# சென்றாய், கொன்றாய்!

அய். உலகநாதன்

ஓரடி வைத்தாய் ஒல்கி யசைந்தாய்
ஓரடி விழுந்தது உளத்தினிலே—இரு
சீரடி கொஞ்ச, சிலம்பு புலம்ப
வேறடி வைத்தாய் நிலத்தினிலே,

பாரடி நெஞ்சம் பளிங்கடி—அதிலுன்
படமடி பாரடி என்றேனே—நீ
சேறடித் தாமரை சிரிப்பது போலெழில்
சிந்தும் சிரிப்புடன் நின்றாயே!

சேரடி இன்பம் தீரடி துன்பம்
கூறடி எண்ணம் என்றேனே—நீ
ஏரடி நிலமென என்மனம் ஆகிட,
ஏனடி பிரிந்தெனைச் சென்றாயே?

நூலடி நுண்ணிடை, சேலடி நின்விழி
பாலடி உன்மொழி அதனாலே—வந்த
மாலடி என்றதும் காலடி குழலுற
நாலடி சென்றனை எதனாலே?

கரும்படி நீயெனில் எறும்படி நானெனப்
படும்படி சொன்னதை மறந்தாயே—எனை
விரும்படி உன்றனைப் பெறும்படி என்றதும்
விழலடி; கிளியெனப் பறந்தாயே!

பொன்னடி நிறத்தினில் பூவடி மனத்தினில்
கண்ணடி நீயெனச் சொன்னேனே—யாவும்
மண்ணடி, ஆசையில் என்னடி லாபம்?
மனநலம் முழுமையும் கொன்றாயே!

# ஒரு காவியம் கனியுது!

பொன்னடியான்

—ஒரு
காதல் காவியம் கனிந்துகொண் டிருக்குது,
கவலைகளே போங்கள்!

—உயர்
கனவினில் நினைவோ நனைந்துகொண் டிருக்குது,
கவலைகளே போங்கள்!

—என்
எண்ணப் பறவை சிறகடித் திருக்குது,
எதிர்ப்புகளே போங்கள்!

—இந்த
இதயம் இளமை இன்னிசை எழுப்புது,
இன்னல்களே போங்கள்!

தேன்மழை பொழிமகள் ஒருத்தியின் விழிகள்என்
வரவுக்கே ஏங்குவதால்—அந்த
ஊன்உயிர் கலந்தவள் கறைபடா இதழ்கள்என்
உணர்வுக்குள் தூங்குவதால்—ஒரு...

பூவிழை மேனியள் மாசிலா உள்ளம்என்
புன்னகை வேண்டுவதால்—அந்தக்
காவியக் கண்மயில் பயில்ஒயி லாட்டம்என்
நினைவினைச் சீண்டுவதால்—ஒரு...

சுடர்முகப் பூங்குரல் மாமகள் என்சுமை
சுமந்திடக் காத்துளதால்—அவள்
இடர்தொடா நெஞ்சம்என் நெஞ்சத்தி லேபின்னி
இன்னிசை நூற்றுளதால்—ஒரு
காதல் காவியம் கனிந்துகொண் டிருக்குது,
கவலைகளே போங்கள்...

# விண்மீன்கள்

## தமிழன்பன்

வானம் எழுதிய காதல் வரிகளின்
அச்சுக் குலைந்த எழுத்துச் சிதறல்;
அழுத வானம் எழுதிப் பார்க்கும்
துயரப் பாடலின் முற்றுப் புள்ளிகள்;
சாதி சாதி என்றித் தமிழர்
நாதியற் றுள்ளம் நலிதல் கண்டே
புண்ணுற்ற வானின் கண்ணீர்த் துளிகள்.

மேக மெத்தைமேல் மின்னும் கன்னிகள்!
திரைக்கு வராத நடிப்புத் தேவிகள்!
வண்டு மொய்க்கா மல்மேல் கண்டவர்
கண்கள் மொய்க்கும் முல்லைக் காடு.
வட்டக் கதிரைத் தட்டி வடித்த
பட்டறை விட்டுப் பறந்த பொறிகள்!
இருட்டுப் பைக்குள் எடுத்துப் போடாச்
சில்லறைச் செம்பொற் காசுகள்—பகலில்
உருண்ட கதிரோன் உகுத்துச் சென்ற
வியர்வைத் துளிகள்; உழைப்பின் விரிவுரை!

நிலாத்தேர் ஓடும் நெடிய பாட்டையில்
தூரம் காட்டத் துடைத்து நாட்டிய
ஒளிமக் கற்கள்; உயர்புகழ் கொண்ட,
பண்டி றந்த தண்டமிழ் மறவரின்
நடுகற் சிலைகள்; நந்தா விளக்குகள்!
பரந்த வெளியில் நடனம் புரியும்
இரவு மயிலின் தோகை விழிகள்!

விசும்புக் குடையில் விழுந்த ஓட்டைகள்;
நீலக் கடலின் நெருப்புத் தீவுகள்;
மெருகிட்டு மேகம் துடைத்து வைக்கும்
வானக் கடையின் வயிரத் துண்டுகள்;

தூண் இல் லாமல் துலங்கும் பந்தலில்
பதித்து வைத்த பாண்டி முத்துக்கள்.
ஒளிக்கண் சுரக்கும் தங்க ஊற்றுக்கள்!
இரவில் உலகை எட்டிப் பார்க்கும்
அந்தப் புரத்தின் அழகுச் சிலைகள்!

ஒளிக்குலத் தலைவன் உலாவரும் போது
களிப்புடன் சொரிந்த கவின்மலர்த் திரட்சி.
மின்னி மின்னி மீனெனும் பெயரை
நன்று தாங்கிடும் நகுபனித் துளிகளே!

# சாக்காட்டின் மூலையிலே!

கோ. மோகனரங்கன்

சாக்காட்டின் மூலையிலே
சமுதாயம் அழுகிறதே...
பூக்காட்டில் நுழைந்திடமுட்
புதர்வேலி தடுக்கிறதே!

எரிமலையின் குமுறலெலாம்
ஏழைநெஞ்சில் கேட்கிறதே.
திருடர்களின் வெறியாட்டம்
திசைதோறும் தெரிகிறதே!

நல்லறத்தின் பிணந்தின்ன
நரிக்கூட்டம் வருகிறதே.
வெல்லரிய சூழ்ச்சிவலை
வெற்றியினைப் பெறுகிறதே!

வெள்ளாட்டுச் சந்தையைப்போல்
வீரரினம் சாய்கிறதே.
தென்னமுதத் தேன்கிண்ணம்
தெருவோரம் கிடக்கிறதே!

கண்ணிழந்த மனிதகுலம்
காரிருளில் தவிக்கிறதே.
எண்ணிறந்த வேதனையால்
இளைப்பாறத் துடிக்கிறதே!

புன்னகையின் தோற்றத்தில்
புலிபதுங்கிப் பார்க்கிறதே.
அன்பினையும் விலையாக்கும்
அங்காடி நடக்கிறதே!

மேலென்பார் கீழென்பார்
மெய்யறிவு சிரிக்கிறதே.
நூலறியார் உணர்வறியார்
தூய்மையெல்லாம் பகைக்கிறதே!

விலங்கினம்போல் வாழுகிற
விந்தைகளும் புரிகிறதே.
கலங்கியழும் குரலோசை
கடல்நாணச் செய்கிறதே!

# சிவப்பு மலர்கள்

## குருவிக்கரம்பை சண்முகம்

காலப் புயலின் வீச்சினிலே—கோட்டை
கடகட வெனவே இடிவதனை—இந்த
ஞாலப் பறவைகள் பார்க்கின்றன—புது
நாளின் மனிதா உணர்ந்திடுநீ.

கோலக் கரங்கள் வெண்ணிறத்துப்—பொடி
கொட்டிட உண்டிடச் சிற்றெறும்பும்—பெரும்
நீலக் கடலின் அலைகளைப்போல்—இந்த
நிலத்தில் ஊர்வதைப் பார்த்திடுநீ.

சோலைக் கடற்கரை என்றுதினம்—ஊர்
சுற்றித் திரிந்திடும் ஏமனிதா—அந்த
ஆலைக் கரும்புகள் போல்துயரை—உழைப்
பாளர் அடைவதைக் கண்டிடுநீ.

பாயும் குருதியின் ஓட்டத்திலே—சிவப்
பணுக்கள் அதிகம் இருக்கின்றன—கால்
தோயும் பூமியின் மீதினிலே—பூத்த
சிவப்பு மலர்கள் சிரிக்கின்றன!

ஆற்றைத் தடுத்தான் அணையமைத்தான்—கரும்
பாலையில் சர்க்கரை தான்எடுத்தான்—தென்னங்
கீற்றை எடுத்தான் குடிலமைத்தான்—அதில்
கிடந்தான் பசியால் துடித்தவனாய்...

என்ற கதைகளும் மாறிடவே—அதோ
எங்கும் பூத்தது சிவப்புமலர்—அவை
நின்று சிரித்திடும் காம்புகளை—ஏந்தி
நிலத்தில் செழித்த தோட்டங்கள்பார்!

விண்ணின் உடுக்களைச் சாடியவன்—அவன்
விஞ்ஞா னப்புகழ் பாடியவன்—இந்த
மண்ணில் இடர்களைக் கூடியவன்—அந்த
மனிதன்...உழைப்பவன்...முன்னரதோ

சிவப்பு மலர்கள் சிரிக்கின்றன—நெஞ்சில்
சிந்தனைக் கோடுகள் நெளிகின்றன—உழைத்தோர்
தவிப்பில் போர்க்கொடி பறக்குதடா—பெருஞ்
செல்வர்கள் கூட்டம் முறைக்குதடா!

கானப் பறவையே சிறகசைப்பாய்—வருங்
காலக் கனவினைப் பாட்டிசைப்பாய்—சோற்றுப்
பானைப் பருக்கைகள் உழைப்பவர்க்கே—எனப்
பறந்து பறந்து பாடுநீ ...

# குழந்தை

## நா. காமராசன்

கோடிக் கனவுகள் ஆடி வருகுது—மலர்க்
கூட்டம் எழுந்துயி ரோடு வருகுது;
மோடிக் கவிதையின் ஏடு வருகுது—இன்னும்
முற்றுப் பெறுததோர் பாடல் வருகுது;
காலக் கடலிலோர் ஓடம் வருகுது—மனக்
காட்டை உழுதிடப் பொன்ஏர் வருகுது;
ஞால இருட்டிலோர் விடியல் வருகுது—புது
ஞானக் கலைகளின் படையல் வருகுது!

காலை வெயிலிலோர் நிலவு வருகுது—மனக்
காதல் அணிந்திரு கால்கள் வருகுது;
சோலை மலருடன் வண்டு வருகுது—சிறு
தோளை அசைத்தொரு தூது வருகுது;
பேதை விழிகளின் கனவு வருகுது—மொழி
பேசத் தெரியாத மனது வருகுது;
ஆதி மனிதனின் ஆவி வருகுது—எடுத்(து)
ஆளமுடியாத உவமை வருகுது!

தாய்மை அணிந்திடும் மாலை வருகுது—மண்ணில்
தவழு கின்றதோர் கோயில் வருகுது;
வாய்மைக் கோட்டையின் கொடியும் வருகுது—பால்
வார்த்து வளர்த்ததோர் செடியும் வருகுது;
பூவில் கிடந்ததோர் புதையல் வருகுது—இந்தப்
பூமி மடிதேடி மின்னல் வருகுது;
சாவின் நிழலிலோர் வாழ்வு வருகுது—உயிர்ச்
சாலை வழியொரு பறவை வருகுது!

# கவிஞர்களைப் பற்றி...

அப்துல் ரகுமான் (1937— ): 1960-க்குப் பிறகு கவிதை யுலகுக்கு வந்த இவர் கவியரங்கக் கவிதைகளிலேயே சிறப்படைந் துள்ளார். வார்த்தை ஜாலங்களால் கேட்போரைக் கவருவது இவருடைய பாணி. தமிழ்ப் பேராசிரியராகிய இவர் உரைவீச்சு களும் எழுதுவது உண்டு. வ.வே.சு. ஐயரைப் பற்றி இவர் பாடிய ஒரு பாடல், விடுதலை வீரர் ஐவர் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

கே. சி. எஸ். அருணாசலம் (1921:— ): பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவராகிய கே.சி.எஸ்., ஏழை எளியோரின் வாழ்வையும் வர்க்க எழுச்சியையும் பாடுகிறவராக, 1950-க்குப் பிறகு கவிதைத் துறைக்கு வந்தார். திரைப்படப் பாடலாசிரியர், சிறுகதையாசிரியர், கவியரங்கக் கவிஞர் என்னும் சிறப்புகளும் இவருக்கு உண்டு. இவருடைய கவிதை—என் கைவாள் 'சோவி யத் நாடு – நேரு நினைவுப் பரிசு' பெற்றது. பூர்வீகச் சொத்து (சிறுகதை); கவிதை-என் கைவாள் (கவிதை) என்பன இவருடைய நூல்கள்.

'ஆனந்தம்', எஸ். கருணானந்தம் (1925— ): சுயமரியாதை இயக்கம், அதைச் சார்ந்த அரசியல் போக்குகளுடன் நெருங்கிய தொடர்பும் ஈடுபாடும் கொண்டவர். பூக்காடு என்னும் இவரது கதைக் கவிதைகளின் தொகுப்புக்கு 1971-இல் தமிழக அரசு பரிசு வழங்கியது. இன்றைய வாழ்வின் பல பிரச்னைகளை நகைச்சுவை யும் அங்கதச்சுவையும் ததும்ப, கதைப் பாடல்களாக அமைப்பது இவருடைய பாணி. பூக்காடு, கனியமுது என்பன இவருடைய நூல்கள்.

மீ. இராசேந்திரன் (1938— ): 1960 வாக்கில் கவிதைப்பணி தொடங்கிய 'மீரா' தமிழக அரசின் பரிசு பெற்றவர். பாரதி

தாசன் பாணியில் தொடங்கி, கவியரங்கக் கவிதையில் பழகி, இப்போது 'முற்போக்கு' அணியில் நின்று பாடுகிறவர். தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரியும் இவர், இராசேந்திரன் கவிதைகள், மூன்றும் ஆறும் (கவியரங்கப் பாடல்கள்); கனவுகள்+கற்பனை கள்=காகிதங்கள் (உரைவீச்சு) என்னும் நூல்களை வெளியிட்டுள்ளார்.

அய். உலகநாதன் (1938— ): பாரதிதாசனையும் அவர் வழி வந்த கண்ணதாசன், 'சுரதா' ஆகியவர்களையும் பின்பற்றும் உலகநாதன் மலேசியாவில் பிறந்து அந்நாட்டுத் தமிழர்களின் வாழ்வையும் பிரச்னைகளையும் பாட்டாக்கி வந்தார். 'மலேசியக் கவிஞர்' என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர். 'சந்தனக் கிண்ணம்' இவருடைய கவிதைத் தொகுதி.

கண்ணதாசன் (1927— ): வெவ்வேறு தருணங்களில் வெவ்வேறு அரசியல் கட்சிகளில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தவரான இவர், அச்சமயங்களில் அக்கட்சிகளை உயர்த்திப் பாடியதுண்டு. பல திரைப்படங்களுக்குக் கதையும் உரையாடல்களும் எழுதியதோடு ஆயிரக்கணக்கான திரைப்பாடல்களும் எழுதியுள்ளார். தென்றல், கடிதம், கண்ணதாசன் முதலிய பத்திரிகைகளையும் இவர் நடத்தியதுண்டு. பல பரிசுகளும், 'கவியரசு' என்ற பட்டமும் பெற்றவர். ஈழத்துராணி (சிறுகதை); ஆயிரம் தீவு அங்கயற் கண்ணி, வேலங்குடித் திருவிழா (நாவல்கள்); ஐங்குறுங்காவியங்கள் (கவிதைக் கதைகள்); கவிதாஞ்சலி (செய்யுள் நாடகங்கள்); வனவாசம் (தன் வரலாறு); கண்ணதாசன் கவிதைகள் (5 தொகுதிகள்) முதலியன இவருடைய நூல்கள்.

கம்பதாசன், சி. சு. ராஜப்பா (1916—1969): சோசலிசக் கொள்கைகளைத் தமிழில் மிகுதியாகப் பாடியவர் என்ற சிறப்புக்கு உரியவர். ஆயினும் திரைப்படப் பாடலாசிரியராகவே மிகுதியாகச் செயலாற்றிய அவர் எந்தக் கொள்கையிலும் உறுதியாக நிற்கவில்லை. கனவு, கம்பதாசன் கவிதைகள், பாட்டு முடியு முன்னே, ஆதிகவி, வெகுமதி முதலியன இவருடைய நூல்கள். இவருடைய நயமான கவிதைகளிலெல்லாம் இசைப்பாடலின் செல்வாக்கு மிகுதியாக உண்டு.

கலைவாணன், க. அப்புலிங்கம் (*1917—* ) : *1947*-க்கு முன்பே கவிதை உலகில் புகுந்த இவர் ஜீவானந்தம், மனச்சிமிழ், விட்டில், நிவேதனம், பித்தன், அழியா அழகி, காவிரி, காவை முருகன் பிள்ளைத்தமிழ் முதலிய சிறு சிறு நூல்களையும், உதயம் என்னும் கவிதைக் கதையையும் வெளியிட்டுள்ளார். பழமைப் பண்புகளின் அழிவிற்கு இரங்கியும், வாழ்வு நிலையற்றது என்பதை வலியுறுத்தியும் பாடுவது இவருடைய நெறி. பாவலர் மன்றம் என்னும் அமைப்பு, 1970-இல் இவருக்குக் 'கவிஞர் திலகம்' என்று பட்டம் வழங்கியது.

கவிமணி (*1876 — 1952*) : அழகு தோய்ந்த எளிமை, அவலம் தோய்ந்த விண்ணப்ப நெறி, பழமை தோய்ந்த பாட்டு வடிவம் இவைகளே கவிமணி தேசிக விநாயகத்தின் கவிதைப் பண்புகள், தமிழில் உள்ள சிறுவர் இலக்கியத்தில் இவருடைய பாடல்களே தலைமையானவை. தமிழில் உள்ள மொழிபெயர்ப்புக் கவிதைகளில் இவருடையவற்றுக்குச் சிறப்பான இடம் உண்டு. நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம், மலரும் மாலையும், குழந்தைச் செல்வம், உமர்கய்யாம் பாடல்கள், ஆசியஜோதி என்னும் கவிதைகளோடு, கவிமணியின் உரைமணிகள், தேவியின் கீர்த்தனைகள் என்பனவும் இவருடைய சிறந்த நூல்கள்.

நா. காமராசன் (*1944—* ): *1965*-க்குப் பிறகு கவிதைத் துறைக்கு வந்த காமராசன் உரைவீச்சுகள் எழுதுவதிலும் ஈடுபாடு உடையவர். உருவகம் என்னும் (அணி) உத்தியையே மிகுதியாகக் கையாண்டு கவிதை எழுதுகிறவர் இவர். சூரியகாந்தி, கறுப்பு மலர்கள் என்பன இவருடைய நூல்கள்.

குலோத்துங்கன் (*1929—* ): குலோத்துங்கன் கவிதைகள் என்னும் ஒரே தொகுதியை வெளியிட்டுள்ள டாக்டர் வா. செ. குழந்தைசாமி, பொறியியல் துறையில் சிறப்புப் பெற்ற பேராசிரியர். அறிவியல் புதுமை ஆக்கங்களின் செல்வாக்கை இவருடைய சிந்தனைகளில் பரவலாகக் காணலாம். உலக மானுட விறு பாடுவதோடு, தமிழும் தமிழரும் பழமைப் பிணிப்புகளை விட்டு வெளியேறி அறிவுலக விரிவுகளை அனுபவிக்கவேண்டும் என்ற ஏக்கத்தையும் வெளியிடுபவர் குலோத்துங்கன்.

புலவர் குழந்தை (1906 — 1973): திருக்குறளுக்குப் புதிய உரை ஒன்று எழுதியதன் மூலம் சிறப்புப் பெற்ற புலவர் குழந்தை ஒரு மரபுவழிக் கவிஞர். பழைய காவிய மரபுகளை அப்படியே பின்பற்றி, இராவணனைக் கதாநாயகனாக்கி (1946-இல்) இவர் பாடிய 'இராவண காவியம்' இவருக்கு புதிய சிறப்பைத் தந்தது. தொல்காப்பியர் காலத் தமிழர், யாப்பதிகாரம், காமஞ்சரி, நெருஞ்சிப்பழம், தீரன் சின்னமலை, பூவா முல்லை, அரசியல் அரங்கம் முதலியன இவர் படைப்புகளில் முக்கியமானவை.

கொத்தமங்கலம் சுப்பு (1910–1974) நாடோடிப் பாடல் மெட்டில் கவிதை பாடும் நெறியைக் கடைப்பிடித்த சுப்பு, வேறு பல துறைகளிலும் சிறந்து விளங்கினர். பல துறைப் படங்களுக்குக் கதையும் உரையாடல்களும் எழுதினர். இவரே நடிகராகவும் இயக்குநராகவும் விளங்கியதும் உண்டு. மஞ்சி விரட்டு (சிறுகதை), நாடக உலகம் (நாடகம்), தில்லானா மோகனம்பாள் (நாவல்) முதலிய நூல்களும் எழுதியுள்ளார். இவர் 1947-இல் எழுதி, பல இடங்களில் கவிப்பொழிவாக நிகழ்த்தி வந்த 'காந்தி மகான் கதை' பலரைக் கவர்ந்தது.

ஏ. சண்முகம் (1943— ): மாணவப் பருவத்திலிருந்தே கவிதைக்காகப் பல பரிசுகள் பெற்றுள்ள குருவிக்கரம்பை ஏ.சண்முகத்துக்கு 1968-இல் உலகத் தமிழ் மாநாட்டுக் கவிதைப் போட்டியில் முதற் பரிசு வழங்கப்பட்டது. பாரதிதாசன் பரம்பரையின் செல்வாக்குக்கு மிகுதியும் உட்பட்ட சண்முகம் உரை வீச்சுகளும் எழுதுவார். கண்கள், நினைவுச் சின்னம், பாட்டுப் பறவை, ஒரு குயிலின் குரல், செந்நெல் வயல்கள் என்பன இவருடைய நூல்கள்.

சாலை இளந்திரையன் (1930— ): 1948 வாக்கில் எழுத்துலகுக்கு வந்து, 1960-க்குப் பிறகு மானுடவீறு பாடும் கவிஞராக மலர்ந்தார். கவிதை, கட்டுரை, திறனாய்வு என்னும் துறைகளில் நூல்கள் செய்துள்ள இவருக்கு, இக்காலத் தமிழ்க் கவிதை, ஈழநாட்டு இலக்கியம், பழமொழி ஆகியவற்றில் தனியான ஆர்வமும் தேர்ச்சியும் உண்டு. இவருடைய படைப்புகளுள் தமிழில் சிறுகதை, புரட்சிக்கவிஞர் கவிதைவளம், புதிய தமிழ்க்

கவிதை, உலகம் ஒரு குடும்பம், கூட்டின் அமைதி குலைகிறது முதலிய உரைநடை நூல்களும்— இளந்திரையன் கவிதைகள், அன்னை நீ ஆடவேண்டும், பூத்தது மானுடம், வீறுகள் ஆயிரம் என்னும் கவிதைத் தொகுதிகளும் குறிப்பிடத் தக்கவை.

சிற்பி பாலசுப்பிரமணியன் (1936 — ); 1960-க்குப் பிறகு கவிதைத் துறைக்கு வந்தவர்களில் இவரும் ஒருவர். பாரதி தாசன் பாணியில் தொடங்கிய இவர் பொதுவுடைமை இயக்கத்தில் பற்றுக்கொண்டு பாடுவதும் உண்டு. தமிழ்ப் பேராசிரிய ரான இவர் கவிதைக் கதைகள் – உரைவீச்சுகள் வரைவதிலும் ஆர்வம் உள்ளவர். நிலவுப் பூ, சிரித்த முத்துக்கள், ஒளிப்பறவை என்பன இவருடைய கவிதைத் தொகுப்புகள்.

அ. சீனிவாசராகவன் (1905 – 1974): இலக்கியச் சொற்பொழிவாளரும் ஆங்கிலப் பேராசிரியருமாகிய இவர், நாடகங்களும் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதியிருப்பதோடு (ஆங்கிலத்திலும் தமிழிலும்) மொழிபெயர்ப்புகளும் செய்துள்ளார். இவருடைய வெள்ளைப் பறவை என்னும் கவிதைத் தொகுதி சாகித்திய அகாடெமிப் பரிசுப் பெற்றது. அவன் அமரன், நிழல், காவிய அரங்கில், மேல்காற்று, கவியரசர் கண்ட கவிதை, Voice of a poet, Leaves from Kamban முதலியன இவருடைய நூல்கள்.

சுத்தானந்த பாரதி (1897 — ): சுப்பிரமணிய பாரதியையே பின்பற்றிப் பாடுகின்ற சுத்தானந்தர் கவியோகி என்று சிறப்பிக்கப்படுவர். தமிழ்ப் புலமையோடு வேறு தென்னிந்திய மொழிகளிலும், ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் முதலிய மேலை மொழிகளிலும் புலமை உடையவர். 175-க்கு மேற்பட்ட இவருடைய நூல்களுள் பிரஞ்சுமொழியில் இயன்றவை ஆறு. கவியோகியாரின் நூல்களுள் பாரதசக்தி, சோவியத் கீதாஞ்சலி, உலகப்பாட்டு முதலியவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். இவருடைய சோவியத் கீதாஞ்சலிக்கு, 'சோவியத் நாடு-நேரு நினைவுப் பரிசு' வழங்கப்பட்டது.

எஸ். டி. சுந்தரம் (1921 — ): சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றுள்ள சுந்தரம், நாடக ஆசிரியராக விளங்கிக் கவிதைத் துறைக்கு வந்தவர். சில திரைப்படங்களுக்கும் இவர் உரையாடல்கள் எழுதியுள்ளார். சங்கீத நாடகச்

சங்கத்தின் விருது பெற்றவர். கவியின் கனவு, நம் தாய், மனிதனும் மிருகமும், வீரமாசக்தி என்னும் நாடகங்களும், வருகின்றார் நேதாஜி, வானமுதம் என்னும் கவிதைகளும் இவருடைய நூல்கள்.

சுரதா (1921 — ): பாரதிதாசன் பரம்பரையினருள் முதன்மையான ஒருவராகிய இராஜகோபால் (சுரதா–சுப்புரத்தினதாசன்) இளமையிலேயே திரைப்படத் துறையில் ஈடுபட்டார். ஆயினும் கவிதைத் துறையே இவரை முழுமையாக ஆட்கொண்டது. காவியம், இலக்கியம் என்னும் கவிதைப் பத்திரிகைகளை நடத்தியுள்ள சுரதா, இப்போது 'சுரதா' என்னும் பெயரிலேயே ஒரு கவிதை இதழ் நடத்திவருகிறார். தேன்மழை என்னும் இவர் நூலுக்குத் தமிழக அரசு பரிசு வழங்கியது. உதட்டில் உதடு, பட்டத்தரசி என்பன இவரது பிற படைப்புகள்.

மீ. ப. சோமசுந்தரம் (1921 — ): 1947-க்குச் சற்று முன் தத்துவ நோக்கும் கற்பனுவாதமும் கலந்த கவிதை மூலம் எழுத்துலகுக்கு அறிமுகமான சோமு, பல துறைகளிலும் எழுதியுள்ளார். சாகித்திய அகாடெமி, தமிழக அரசின் பரிசுகளும் பெற்றுள்ளார். இவருடைய கவிதைத் தொகுதிகளில் இசைப் பாடலின் செல்வாக்கினுல் ஏற்பட்ட பல புதிய கவிதை வடிவங்கள் உண்டு. இளவேனில், மனப்பறவை (கவிதை); கேளாத கானம் (சிறுகதை); கடல்கண்ட கனவு (நாவல்); அக்கரைச் சீமையில்... (பிரயாணம்) முதலியன இவருடைய முக்கியமான நூல்கள்.

ஜே. தங்கவேலு, 'சுரபி' (1911 — ): சுதந்திரத்திற்குச் சிறிது காலத்துக்கு முன்பு கவிதைத் துறைக்கு வந்தவர். நாடோடிப் பாட்டு வடிவங்களான கண்ணிகள், சிந்து, கும்மி முதலியவைகளே இவர் விரும்பிக் கையாளும் யாப்பு வடிவங்கள். காந்திய எண்ணங்களில் தோய்வும், காந்தியடிகளிடம் மிகுந்த ஈடுபாடும் கொண்டவர் 'சுரபி'. சக்தி பிறக்குது, சத்திய சாதனை என்பன இவருடைய கவிதைத் தொகுதிகள்.

தமிழ் ஒளி (1924-1965): 1948 வாக்கில் கவிதைத் துறைக்கு வந்த விஜயரங்கம் (தமிழ் ஒளி), பாரதிதாசன் பாணியிலேயே கவிதைகளும் கவிதைக் கதைகளும், கட்டுரைகளும் எழுதிவந்தார். நாளடைவில் பழைய கம்பன் பாணிக் கவிதைப் படைப்பில் அவருடைய மனம் ஈடுபட்டது. இவருடைய நூல்களுள் சிலப்பதிகாரம்

நாடகமா - காவியமா?; தமிழர் சமுதாயம் (உரைநடை); கோசலைக் குமரி, கண்ணப்பன் கிளிகள் (கவிதைக் கதைகள்); விதியோ - வீணையோ? (இசை நாடகம்), தமிழ்ஒளியின் கவிதைகள் முதலியன முக்கியமானவை.

தமிழழகன் (1929 — ): 1947 - க்குப் பிறகு கவிதை உலகில் அடிவைத்த தமிழழகன் (வே. சண்முகசுந்தரம்) சந்தக்கவி மணி, தீந்தமிழ்ப் பாவலர், கவிமாமணி என்னும் பட்டங்கள் பெற்றவர். குழந்தைப் பாடல் பாணியில் அமைந்த (பின்இயைபுச்) சந்தப் பாடலே இவரது பாட்டுமுறை. தமிழழகன் கவிதைகள், பூமத்தாப்பு, மழலை அமுதம் (சிறுவர் பாடல்கள்); ஸ்ரீ காமாட்சி அந்தாதி, ஸ்ரீ காமாட்சி வெண்பாத் திரட்டு முதலியன இவருடைய நூல்கள்.

தமிழன்பன் (1943— ): கவிதைக்காக 1973-இல் தமிழக அரசின் பரிசுபெற்ற ந, செகதீசன் 1960-க்குப் பிறகு கவிதை உலகுக்கு வந்தவர். தமிழன்பன் கவிதைகள், தோணி வருகிறது, சிலிர்ப்புகள் (உரைவீச்சு) என்னும் நூல்களை வெளியிட்டுள்ள இவர் கவியரங்கக் கவிதையில் திறமை மிக்கவர். உருவகம், சொல் முரண், கருத்து முரண் போன்ற உத்திகளால் கவியரங்கக் கவிதைக்குச் சுவை ஊட்டுவது இவருடைய பாணி.

திருலோக சீதாராம் (1917 — 1973): பாரதி, பாரதிதாசன் முதலியவர்களின் கதைப் பாடல்களைக் கவிதைப் பொழிவாய் நிகழ்த்துபவராகக் கவிதை உலகுக்கு அறிமுகமானார். 'சிவாஜி' என்னும் இதழைப் பல காலம் வார இதழாகவும் பின்னர் சிறிது காலம் மாத இதழாகவும் நடத்தினார். 'சித்தார்த்தன்' என்னும் ஜெர்மானிய நாவலையும் வேறு சில நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். பல கவிஞர்களின் பாடல்களைத் தொகுத்துப் 'புதுக் கவிமலர்கள்' வெளியிட்டார். உதயம், கந்தர்வகானம் (கவிதை), இலக்கியப் படகு (கட்டுரை) என்பன இவருடைய நூல்கள்.

துரை மாணிக்கம் (1920 — ): பாரதிதாசனின் பல கொள்கைகளையும் அவர் இறுதி நாளில் மேற்கொண்ட தனித்தமிழ் நடையையும் ஏற்றுப் பாட்டிசைப்பவர் (பெருஞ்சித்திரன் என்னும்) துரை மாணிக்கம். 'தமிழ்நாடு தனிச் சுதந்திர நாடாக உருவாக

வேண்டும்' என்பது இவர் கொள்கை. தென்மொழி, தமிழ்ச்சிட்டு என்னும் இதழ்களின் ஆசிரியர். கொய்யாக்கனி, அய்யை, பாவியக்கொத்து, மகபுகு வஞ்சி, எண்சுவை எண்பது முதலியன இவருடைய நூல்கள்.

நாமக்கல் கவிஞர் *(1888 - 1972)*: காந்தியக் கவிஞர் என்ற சிறப்புடன் விளங்கிய வெ. இராமலிங்கம் தேசிய (உப்புச் சத்தியாக்கிரக)ப் போராட்டத்தின் போது கவிஞராக முன்னணிக்கு வந்தவர். தமிழன் இதயம், சங்கொலி (கவிதைகள்); அவளும் அவனும் (கவிதைக் கதை); மாமன் மகள் (நாடகம்); என் கதை (தன் வரலாறு); மலைக்கள்ளன் (நாவல்); திருக்குறள் புதுஉரை முதலியன இவருடைய நூல்கள். மலைக்கள்ளன் திரைப்படமாகவும் வந்துள்ளது. தமிழக அரசு இவரை அரசவைக் கவிஞராக (Poet Laureate) நியமித்துச் சிறப்பித்தது. இந்திய அரசு இவருக்குப் 'பத்மபூஷண்' பட்டம் வழங்கியது.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் *(1930 – 1959)*: இளமை முதலே நாடகக் கலையிலும் விவசாய இயக்கத்திலும் ஈடுபாடு கொண்டார் கல்யாணசுந்தரம். பொதுவுடைமைக் கட்சி அவருடைய பார்வையை உருவாக்கியது; திரைப்படத்துறை அவருடைய பாட்டுத்திறனுக்கு வாய்ப்பளித்தது. வர்க்க எழுச்சி, மானுட வீறு என்பன இவருடைய பாடலில் ஆற்றலோடு வெளிப்படும் கருத்துக்கள். அவருடைய பாடல்களில் சிலவற்றை அவருடைய மறைவுக்குப் பிறகு, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் என்னும் தலைப்பில் புத்தகமாக வெளியிட்டுள்ளார்கள்.

பாரதிதாசன் *(1891 - 1964)*: இந்த நூற்றாண்டின் முற்பகுதி தொடங்கி 1964 வரை ஆற்றல் வாய்ந்த கவிஞராக விளங்கியவர். தாழ்த்தப்பட்டோர் நலன், வறியோர் எழுச்சி, சாதி ஆதிக்க எதிர்ப்பு, சமய மூடநம்பிக்கை ஒழிப்பு, விதவை மறுமணம், பெண்ணுரிமை, காதல், தமிழ்ப் புகழ்ச்சி போன்றவை இவருடைய முக்கியமான கவிதைப் பொருள்கள். பாரதிதாசன் கவிதைகள் (3 தொகுதிகள்); பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், தமிழச்சியின் கத்தி, குடும்பவிளக்கு, குறிஞ்சித்திட்டு, இசையமுது (2 தொகுதிகள்); இளைஞர் இலக்கியம், அழகின்

சிரிப்பு, தமிழியக்கம், இரணியன் அல்லது இணையற்ற வீரன், படித்த பெண்கள், அமைதி முதலான பல நூல்களை வெளியிட்டிருப்பதோடு — 'குயில்' என்னும் கவிதை இதழையும் நடத்தி வந்தார் பாரதிதாசன். பிசிராந்தையார் என்னும் இவருடைய நாடகநூல் சாகித்திய அகாடெமிப் பரிசு பெற்றது. தமிழ் மக்கள் இவரைப் புரட்சிக் கவிஞர் என்றும், பாவேந்தர் என்றும் பாராட்டினர்கள்.

ந. பிச்சமூர்த்தி (1900— ): சிறுகதை, கட்டுரை, நாடகம், கவிதை, உரைவீச்சு என்னும் பல துறைகளில் ஈடுபட்டு வந்துள்ள பிச்சமூர்த்தி 1938 வாக்கில் இலக்கிய உலகுக்கு வந்தார். 'இதுவரை எடுத்துரைக்கப்பட்டுள்ள சமய, அரசியல் தத்துவம் எதுவும் மனிதனை ஈடேற்றப் போவதில்லை' என்ற நோக்கில் எழுதுபவர் பிச்சமூர்த்தி. இவருடைய நூல்களில் பதினெட்டாம் பெருக்கு, பிச்சமூர்த்தி கதைகள், ஜம்பரும் வேஷ்டியும், மாங்காய்த்தலை, காளி, காட்டுவாத்து, வழித்துணை என்பன முக்கியமானவை.

பெரியசாமித் தூரன் (1908— ): தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் சிறப்பாசிரியராகிய தூரன், 1949-இல் 'இளந்தமிழா' என்னும் கவிதைத் தொகுதியின் மூலம் எழுத்துலகுக்கு அறிமுகமானர். 'பாரதி தமிழ்' என்னும் (பாரதி படைப்பு) அடைவு நூல் இவருக்குப் பெருஞ் சிறப்பளித்தது. தமிழக அரசின் பல பரிசுகள் பெற்றுள்ள இவருக்கு இந்திய அரசு 'பத்மபூஷண்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. தங்கச் சங்கிலி (சிறுகதை); காதலும் கடமையும் (நாடகம்); தேன்சிட்டு, காட்டுவழிதனிலே (கட்டுரை); தூரன் கவிதைகள் முதலியன இவருடைய நூல்களில் சில. தமிழ்க் கவிதை வடிவங்களில் புதுமை செய்தவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் தூரன்.

தெ. பொன்னடியான் (1940— ): பாரதிதாசன் பரம்பரையினருள்ளே காலத்தால் பிந்தியவர்களுள் ஒருவர். 1960 வாக்கில் கவிதை உலகுக்கு வந்த இவர் பனிமலர், ஒரு கைதியின் பாடல்கள், ஓர் இதயத்தின் ஏக்கம் என்னும் கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். 1966 முதல் 'முல்லைச்சரம்' என்னும் கவிதை (மாத) இதழை வெளியிட்டு வருகிறர்.

மின்னூர் சீனிவாசன் (1934— ): 1965 வாக்கில் கவிதைத் துறைக்கு வந்த சீனிவாசன் ஒரு தமிழ்ப் பேராசிரியர். கவிமணியைப் போன்றதொரு மெல்லிய குரலில் இயற்கைக் காட்சிகளைப் பாடும் இயல்பினர், மழலைக் கனவுகள், மின்னூர் சீனிவாசன் கவிதைகள் என்னும் இரண்டு தொகுதிகளை வெளியிட்டுள்ள இவர் மெல்லிசைப் பாடல்களும் எழுதுவதுண்டு.

முடியரசன் (1920— ): 1942 முதலே கவிதைத் துறையில் நிலைத்துள்ள இவர் (கா.சு.துரைராசு) பல பரிசுகளும் பாராட்டும் 'கவியரசு' என்ற பட்டமும் பெற்றவர். இவர் சுயமரியாதை இயக்கம், அதைச் சார்ந்த அரசியல் அணிகளின் கொள்கைகளைப் பாடுவது உண்டு. முடியரசன் கவிதைகள், கவியரங்கில் முடியரசன் (இரண்டும் கவிதை); காவியப்பாவை (பாடல்கள்); பூங்கொடி, வீரகாவியம் (கவிதைக் கதைகள்); எக்கோவின் காதல் (கதைகள்); அன்புள்ள பாண்டியனுக்கு (கட்டுரை) என்பன இவருடைய நூல்கள்.

தி. முருகுசுந்தரம் (1930— ): 1956-க்குப் பிறகு கவிதையுலகில் செல்வாக்குப் பெற்ற இவர், சுரதாவின் பாணியைப் பின்பற்றிக் காதல் பாட்டுகள் பாடத்தொடங்கினார். பிற்காலத்தில் உலகப் பேரறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கவிதையாக்குவதில் இவருடைய கவனம் திரும்பியது. தமிழகத்தில் குறிஞ்சிவளம், வள்ளுவர் வழியில் காந்தியம், காந்தியின் வாழ்க்கையிலே, கென்னடி என்னும் கட்டுரைகளும், கடைதிறப்பு என்னும் கவிதைத் தொகுப்பும் இவருடைய நூல்கள்.

கோ. மோகனரங்கன் (1942— ): 1965-க்குப் பிறகு கவிதையுலகில் இடம் பிடித்த மோகனரங்கன் கவிதை, பாநாடகம், இசைப் பாடல் முதலிய துறைகளில் எழுதி வருகிறார். மோகனரங்கன் கவிதைகள், சித்திரப்பந்தல், காலக்கிளி, வைரமூக்குத்தி, புது மனிதன், யாருக்குப் பொங்கல், கனவுப்பூக்கள் (கவிதைக் கதை), பள்ளிப் பறவைகள் (சிறுவர் பாடல்) என்பன இவருடைய நூல்கள்.

ச. து. சு. யோகியார் (1904—1963): தேசபக்த கீதம், தமிழ்க் குமரி முதலிய தொகுதிகள் மூலம் சுதந்திரத்திற்கு முன்பே

கவிதை உலகில் நிலைபெற்றவர். உமார்கய்யாமின் ரூபாயியாத், ஹெமிங்வேயின் கடலும் கிழவனும், வால்ட் விட்மனின் புல்லிதழ் கள் முதலியவற்றைத் தமிழாக்கியுள்ளார். பெரிதும் கம்பன் கவிகளிலும் இடைக்காலத்து வீரப்பாடல்களிலும் ஈடுபட்டு அதே பாணியில் பாடிவந்த யோகியார், மனிதனைப் பாடுவேன் (Leaves of grass) என்னும் தமிழாக்கத்தில் தனித்தன்மை காட்டுகிறார். இவருடைய 'தமிழ்க்குமரி' சிறந்த தொகுப்பு.

சி. ரகுநாதன் (1923— ) : சுதந்திரத்திற்குச் சற்று முன்பு எழுத் துலகில் வந்த இவர் பல துறைகளில் நூல்களை வெளியிட்டுள் ளார். பொதுவுடைமை இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு உள்ளவர். புயல், பஞ்சும் பசியும் (நாவல்கள்); இலக்கிய விமர் சனம், பாரதியும் ஷெல்லியும், கங்கையும் காவிரியும் (திறனாய்வு கள்); ரகுநாதன் கவிதைகள், சேற்றிலே செந்தாமரை (சிறு கதைகள்); ரகுநாதன் கவிதைகள், கவியரங்கக் கவிதைகள், புதுமைப்பித்தன் (வாழ்க்கை வரலாறு) முதலியன நூல்களில் முக்கியமானவை. இரண்டு முறை 'சோவியத்நாடு-நேரு நினைவுப் பரிசு' பெற்றவர். கவியரங்கக் கவிதையில் தனி வழி கண்ட சிறப்பு இவருக்கு உண்டு.

வாணிதாசன் (1915— ): பாரதிதாசன் பரம்பரையினருள் மூத்தவரான அரங்கசாமி (வாணிதாசன்) பழைய இலக்கிய இலக்கண மரபு வழுவாமல் பாடவேண்டும் என்ற கொள்கை உடையவர். புதுமைக் கவிஞர், பாவலரேறு முதலிய பட்டங்கள் பெற்றவர். தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோ வியம், வாணிதாசன் கவிதைகள், தீர்த்த யாத்திரை, இன்ப இலக் கியம், பொங்கல் பரிசு, சிரித்த நுணா, இரவு வரவில்லை, பாட்டுப் பிறக்குமடா, இனிக்கும் பாட்டு, எழில் விருத்தம், பாட்டரங்கப் பாடல்கள் என்பன இவருடைய நூல்கள்.

வெள்ளியங்காட்டான் (1907— ) : மதமும் சாதியும் வளர்த்த அமைப்புகளை வன்மையாகச் சாடி, திட்டமிட்ட உழைப்பே உயர்வுதரும் என்று பாடுவது இவருடைய வழக்கம். பல தனிநிலைக் கவிதைகள் பாடியுள்ள இவர் கவிஞன், அறிஞன் என்னும் கவிதைக் கதைகளையும் பாடியுள்ளார். மலினமான மெல்லோசைச் சொல் வாக்குகளுக்கு உட்படாமல் செறிவான கவிதைகளை யாப்பவர் வெள்ளியங்காட்டான்.

# நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

## சில புதிய வெளியீடுகள்

### சுதந்திரப் போராட்டமும் மத்தியச் சட்டசபையும்

*மனோரஞ்சன் தாஸ்.* தமிழாக்கம்: *சாலை இளந்திரையன்.*

வெள்ளையர்கள் மத்தியச் சட்டசபையில் இந்தியர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளித்ததைத் தொடர்ந்து, மத்தியச் சட்டசபையும் சுதந்திரப் போராட்டத்தின் ஒரு களமாயிற்று. இப்போராட்டத்தை—வெள்ளையரிடமிருந்து சட்டசபை நுணுக்கங்களைக் கற்று இறுதியில் அவர்களுக்கெதிராகவே அதைப் பிரயோகித்து இந்தியர்கள் அடைந்த வெற்றிகளை—சுவையாக விவரிக்கும் நூல்.

பக்கம்: 406 விலை: ரூ. 10-50

### தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் — *'சோமலெ'*

சுவை மிக்க இந்நூல், தமிழ்நாட்டு மக்களுடைய சடங்குகள், சம்பிரதாயங்கள், பண்டிகைகள், திருவிழாக்கள், மதம், பழக்கவழக்கங்கள், குறிசொல்லும் முறைகள், மந்திர தந்திரங்கள், இசை, நடனம், நாடகம் முதலிய பலவற்றையும் அலசி ஆராய்கிறது. பல புகைப்படங்கள் மற்றும் வரைபடம் அடங்கியது.

பக்கம்: 272 விலை: ரூ. 8-75

### விண்வெளி அற்புதங்கள் — *மோகன் சுந்தரராஜன்*

மனிதன் மண்ணை விட்டு விண்ணுக்கு ஏன் செல்கிறான்? விண்வெளியில் நிகழ்த்தப்பட்டு வரும் சாதனைகள் என்னென்ன? இவை மனிதனின் அன்றாட வாழ்வில் எவ்வாறு உதவக்கூடும்? இத்தகைய கேள்விகளுக்கு விடை கூறும் நூல். பல புகைப் படங்கள், கோட்டுச் சித்திரங்கள் அடங்கியது.

பக்கம்: 118 விலை: ரூ. 9-00

மற்றும் எழுபதுக்கும்
மேற்பட்ட சிறந்த நூல்கள்

ரூ. 5/-